


வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
# கல்முனை NET
kalmunainet.com
e paper




தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
பிலவ வருடம் ஆடி 01 [17.07.2021] இதழ் : 25

## பொத்துவில் நிலைமை மோசமாகிறது!

### நேற்று 23 பேருக்கு தொற்று: ஒருவர் பலி!

### குண்டுமடு பிரிவை முடக்க பரிந்துரை

(வேதசகா)

கல்முனைப் பிராந்தியத்திலுள்ள பொத்துவில் சுகாதார அதிகாரிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்து வருகிறது. அங்கு கடந்த இரு வாரங்களில் 170 பேருக்கு தொற்று இனங்காணப்பட்டுள்ளது.

நேற்றுக்(16) காலை நடாத்திய அன்ரிஜன் சோதனையின் போது 23 பேர் தொற்றுக்கு இலக்காகியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது பொத்துவில் 9 (குண்டுமடு) கிராம சேவையாளர் பிரிவில் இனங்காணப்பட்டுள்ளது.

02



## இரண்டு மாதங்களில் வடக்கு கிழக்கில் கொவிட்தடுப்பூசி!



02

## ஜனாதிபதியின் உத்தரவு!

நமது நிருபர்

நாட்டில் நடமாடும் தடுப்பூசி நிலையங்களை விரைவாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ ஆலோசனை வழங்கியுள்ளார். உடல்நலக்குறைவினால் வீடுகளிலிருந்து வெளியேற முடியாதவர்களுக்காக இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்றுதல் மற்றும்

02

## கல்முனைப் பிராந்தியம் மீண்டும் உச்சத்தில்!

(வேதசகா)

கிழக்கு மாகாணத்தில் கடந்த 24மணி நேரத்தில் 168பேர் கொரோனாத் தொற்றுக்கிலக்காகியுள்ளனர். அவர்களில் அதிகூடிய தொற்றுக்கள் கல்முனை மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் ஏற்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

கிழக்கில் முதலாவது அலையில் அதிகூடிய உச்சத்திலிருந்த கல்முனைப் பிராந்தியம் 2ஆம் 3ஆம் அலைகளின் போது தொற்றுக்களும் மரணங்களும் குறைந்து இறுதிக்கட்டத்திலிருந்தது. ஆனால் அண்மைக் காலமாக மீண்டும் அங்கு தொற்றுக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காணக் கூடியதாயுள்ளது.

கடந்த 24மணி நேரத்தில் அங்கு 58பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. அதிலும் பொத்துவிலில் 19 பேரும் நிந்தவூரில் 11 பேரும் அக்கரைப்பற்றில் 9 பேரும் கூடுதலாக பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

10

## விடுதலை கோரி யாழில் போராட்டம்!

நமது நிருபர்

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியே குறித்த போராட்டம் முன்னெடுக்

02

## கொவிட்டால் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சியாம்!

நமது நிருபர்

கோவிட் தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் இலங்கையில் சிசு பிறப்பு வீதம் சடுதியாக குறைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

கோவிட் தொற்றினால் அமுல்படுத்தப்பட்ட பயணக்கட்டுப்பாடு இதில் தாக்கத்தை செலுத்தியதாகவும் அந்தக் காலகட்டத்தில் திருமணங்கள் இடம்பெறவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் ஒருவருடத்தில் 350000 சிசுப் பிறப்புக்கள் பதிவாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.


## திருக்கோவில் ஆடி அமாவாசை உற்சவம் நடைபெறாது!

நமது நிருபர்

திருக்கோவில் ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம். இம்முறை நடைபெறாது என ஆலய நிருவாகம் அறிவித்துள்ளது.

திருக்கோவில் பிரதேச சுகாதாரத்துறையினர் விடுத்த இறுக்கமான நடைமுறைகளுக்கேற்ப உற்சவம் நடாத்த முடியாத காரணத்தினால் மேற்குறிப்பிட்ட

02



## மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்து இடைநிறுத்தம்!

02

## ஜோசப் ஸ்ராலின் உட்பட 16 பேர் விடுதலை

நமது நிருபர்

முல்லைத்தீவு கேப்பாபுலவு விமானப் படை முகாமில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட 16 பேர் நேற்று மாலை விடுதலை

02

## மருதமுனை முடக்கம் இன்று நீக்கம்!

நமது நிருபர்

கொரோனாவினால் பாதிக்கப்பட்டு கடந்த 03ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தப்பட்ட மருதமுனை 03 கிராம சேகவர் பிரிவு இன்று (17) காலை 6 மணியுடன் தளர்த்தப்படுவதற்கு தேசிய கொரோனா தடுப்பு செயலணிக்கு பரிந்துரை செய்யப்படவுள்ளதாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம் அஸ்மி தெரிவித்தார்.

மருதமுனை 03 கிராம சேவகர் பிரிவு முடக்கப்பட்ட நிலைமை காலை

02

## 15 லட்சம் மெடோனா இலங்கைக்கு!

நமது நிருபர்

அமெரிக்கா 15 இலட்சம் மொடர்னா கோவிட் தடுப்பூசிகளை நேற்று(16) இலங்கைக்கு வழங்கியுள்ளது.

எவ்வித நிபந்தனைகளும் இன்றி இலங்கைக்கு கோவிட் தடுப்பூசிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தடுப்பூசியை இலங்கைக்கு வழங்குவதில் எவ்வித உள்நோக்கமோ நிபந்தனைகளோ கிடையாது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிஸ் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் கொவேக்ஸ் திட்டத்தின் கீழ் அமெரிக்காவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு தொகுதி தடுப்பூசிகளே இவ்வாறு இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

### கதிர்காம ஆடிவேல் விழா



யானைகள் கொத்து பந்தல் இடும் பாரம்பரிய நிகழ்வு

### நேற்று 23 பேருக்கு தொற்...

அதனால் இந்த பொத்துவில் 9ஆம் பிரிவை (குண்டுமடு) முடக்குவதற்கு கல்முனைப் பிராந்திய சுகாதாரசேவை பணிப்பாளர் பணிமனை தேசிய கொவிட் செயலணிக்கு பரிந்துரை செய்துள்ளது.

நேற்றுமுன்தினம் பொத்துவில் பிரதேசத்தில் 19பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

ஏலவே பொத்துவில் 13ஆம் கிராமசேவையாளர் பிரிவு தேசிய கொவிட் செயலணியால் முடக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அங்கு 9ஆம் பிரிவும் முடக்கப்படவுள்ளது.

முடக்கப்பட்ட குறித்த 13ஆம் பிரிவிலிருந்த 94வயதான நபரொருவர் நேற்று(16) கொரோனாவால் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சியாக பொத்துவில் பிரதேசத்தின் சிலபகுதிகளில் தொற்றின் தாக்கம் அதிகரித்துவருவதனால் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கல்முனைப்பிராந்திய சுகாதாரசேவை பணிப்பாளர் டாக்டர் குண.சுகுணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஜோசப் ஸ்ராலின் உட்பட...

செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்றிரவு கொழும்புக்கு அவர்கள் அழைத்துவரப்பட்டனர்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் மேற்கொண்ட அடக்கு முறைக்கு எதிராக அனைத்து தரப்பினரும் கொடுத்த அழுத்தம் காரணமாகவே தான் விடுவிக்கப்பட்டுள்ளதாக ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

### இரண்டு மாதங்களில்...

**நமது நிருபர்**

வடக்கு – கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் இரண்டு மாதக் காலப்பகுதிக்குள் கொவிட் தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதற்கு விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கௌரவ இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி இவ்விசேட திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார்.

### மருதமுனை முடக்கம்...

6 மணியுடன் தளர்த்தப்பட்டாலும் தொடர்ந்தும் பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நடக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

### திருக்கோவில் ஆடி...

முடிவுக்கு வந்திருப்பதாக சபை தெரிவித்துள்ளது.

ஆலயத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் செயலாளர் அ.செல்வராஜா ஆகியோர் இணைந்து நிருவாகசபையின் தீர்மானம் பற்றி அறிவித்துள்ளனர்.

இந்தவருடத்திற்கான ஆடி அமாவாசை உற்சவம் ஜூலை மாதம் 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சிங்கள மக்களின் அழிவும் நிச்சயம்!

**நமது நிருபர்**



அடக்குமுறை என்பது தங்கள் மீதும் பிரயோகிக்கப்படும் என்பதை உணராத பட்சத்தில் சிங்கள மக்களின் அழிவும் நிச்சயம் இடம்பெறும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

73 வருடங்களாக தமிழ் மக்கள் அனுபவித்து வந்த அடக்குமுறைகளும் அநீதிகளும் தற்போது கட்சி பேதமின்றி அனைவர் மீதும் பிரயோகிக்கப்படுவதாக யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் வைத்து அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இராணுவ மயமாக்கலுக்கு எதிராக தற்போது செயல்படும் தென்னிலங்கை சிவில் அமைப்புகள் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக வடகிழக்கில் இடம்பெறும் இராணுவ மயமாக்கலுக்கு எதிராக குரல் எழுப்பியதில்லை என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

## சம்மாந்துறையில் 7 வங்கிகளின் 70 ஊழியர்க்கு பிசிஆர் சோதனை!

**நமது நிருபர்**

சம்மாந்துறைப் பிரதேசத்திலுள்ள ஏழு(7) அரச மற்றும் தனியார் வங்கிகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் 70 பேருக்கு நேற்று (16) வெள்ளிக்கிழமை பிசிஆர் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்மாந்துறை நகரிலுள்ள மக்கள் வங்கி, ஹற்றன் நாசனல் வங்கி, அமானா வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, கிராமிய அபிவிருத்தி வங்கி, சணச அபிவிருத்தி வங்கி, செலான் வங்கி ஆகிய ஏழு வங்கிக் கிளைகளில் நேற்று பிசிஆர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்எஸ்.ஐ.எம்.கபீர்தலைமையிலானசுகாதாரத்துறையினர் சோதனைநடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துவருகின்றனர்.

மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.எ.றாசிக் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் முருகேசு ராஜ்குமார் உள்ளிட்ட குழுவினர் இச்சோதனை நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இவர்களுக்கான பெறுபேறுகள் நாளை கிடைக்கப் பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இளைஞர்களிற்கு தலைமைத்துவ பயிற்சி

**நமது நிருபர்**

18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களிற்கு இராணுவமுகாம்களில் தலைமைத்துவ பயிற்சியை வழங்கவேண்டும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இராணுவமுகாம்களில் பயிற்சி வழங்கப்படுவது இளைஞர்களை படை வீரர்களாக்கும் நடவடிக்கையில்லை.

இவ்வாறான பயிற்சி சமூகத்தில் ஒழுக்கத்தை பேணுவதற்கு உதவும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## காரைதீவு ஹ. நெ. வங்கி பெண் ஊழியருக்கு கொரோனா!

**நமது நிருபர்**

காரைதீவு ஹற்றன் நாசனல் வங்கிக் கிளையில் பணியாற்றும் பெண் ஊழிய ரொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று(16) வங்கி முகாமையாளர்மோசஸ்உள்ளிட்டஎட்டுஊழியருக்கு காரைதீவு சுகாதாரத் துறையினர் பி சி ஆர் சோதனை செய்துள்ளனர்.

### ஜனாதிபதியின் உத்தரவு...

எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில், COVID ஒழிப்பு விசேட குழுவுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக அடையாளங்காணப்பட்டுள்ள COVID நோயாளர்கள் மற்றும் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள்.

இதனால், தடுப்பூசி ஏற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும் அது தொடர்பில் அறிவூட்டுவது குறித்தும் தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு மக்களை உட்படுத்துவதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி எடுத்துரைத்துள்ளார்.

எந்த துறையிலும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு, எந்தவோர் இடத்திலும்இலகுவாகதடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்கானசந்தர்ப்பத்தைஏற்படுத்திக்கொடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

### மாகாணங்களுக்கு இடையி...

**நமது நிருபர்**

மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்து சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இன்று (சனிக்கிழமை) முதல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி வரையில் இவ்வாறு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் திரிபடைந்த கொரோனா வைரஸ்கள் அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

### விடுதலை கோரி...

கப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரை இந்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றுள்ளது.

குறித்த போராட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இலவச கல்விக்கு பாரிய...

படுத்தியுள்ளமைக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கம் முன்னெடுத்துள்ள போராட்டத்திற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆதரவை வெளியிட்டுள்ளது.

கல்விச் சீர்திருத்தங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள், தற்காலத்துக்கு பொருத்தமான ஒரு கல்வி முறையை முன் வைக்க வேண்டுமே அன்றி அரசியல் நோக்கங்களை ஆதரிக்கின்றவர்களாக இருக்கக்கூடாது' என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

### வார்த்தைகளுக்கு அணை கட்டுங்கள்

ஜோசப் ஸ்டாலினும் ஏனைய தொழிற்சங்க பிரமுகர்களும் கைது செய்யப்பட்டவிதம்ஏற்புடையதுஅல்ல.அரசாங்கத் தரப்பில் உள்ள அமைச்சர்களும் இதனைஏற்றுக்கொள்கிறார்கள்.அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் சில இராஜாங்க அமைச்சர்களும் தொழிற்சங்க தலைவர்களின் கைது நடவடிக்கையை கண்டித்து இருக்கிறார்கள். ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் இந்த அமைச்சர்களின் பண்பு உண்மையில் மெச்சத்தக்கது.

தனிமைப்படுத்தல் சட்டம் என்பது, நாட்டை பாதுகாக்கும் ஆயுதம். இதனை அரசியலாக்க முனைவது, ஜனநாயகத்தின் குரலை நசுக்குவதற்குவதற்கான எத்தனிப்பாகும்.

மக்களின் உணர்வுகளுக்கு இடம் கொடுக்காமல், ஜனநாயக வழிமுறையில் நாட்டை கொண்டு செல்ல முடியாது. போராட்டம் என்பது அடிப்படை உரிமை என்பதனால்தான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கொழும்பு காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான பிரத்தியேக இடம் ஒன்றை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார். இது ஜனநாயகத்தை ஜனநாயக வழியில் மதிக்கும் அரசியல் உயர் பண்பாகும்.

ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்கத் தலைவர்களை கைது செய்தது தொடர்பில், கடமையிலிருந்த பொலிசாரை குற்றம் காண்பது பெரும் அபத்தம். எய்தவன் இருக்க அம்பை நோவானேன். களத்தில் உத்தரவிட்ட அதிகாரிகள் யார் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும்.

ஜனநாயக வழியில் நடத்தப்பட்ட சிறு போராட்டமொன்றை, அதிகார பலத்துடன் அடக்க முற்பட்டதனால், நாடெங்கும் போராட்டங்கள் வெடித்திருக்கின்றன. இது அண்ணாந்து பார்த்து துப்புவதற்கு ஒப்பானது என்பதை எந்த தரப்பாக இருந்தாலும், ஏற்றுக் கொண்டு தான் ஆகவேண்டும்.

ஆசிரிய தொழிற்சங்கங்களின் இந்த போராட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, “ஆசிரியர்களின் காலகண்ணி நடவடிக்கை” அதாவது, “ஆசிரியர்களின்இழிவானசெயல்பாடு” என்று கூறினார். இதனை, சில தமிழ் காட்சி ஊடகங்கள் “நாசமாப்போன ஆசிரியர்கள்” என மொழிபெயர்த்து செய்திகளை வெளியிட்டன. (காலகண்ணி என்ற சிங்கள சொல்லுக்கு அது சரியான மொழிபெயர்ப்பாக தெரியவில்லை.)

இது தமிழ் பேசும் ஆசிரியர்கள் மத்தியில் கடுமையான ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளது. ஆசிரிய சமூகம் என்பது இந்த நாட்டின் முதுகெலும்பு மட்டுமல்ல, பொருளாதாரத்துக்கும் வித்திடுபவர்கள். ஒரு சமூகத்தின் பலமான தூண்களே இவர்கள். இத்தகைய பெருமைமிக்க கல்விச் சமூகம், அடிப்படை உரிமைக்காக போராடும் போது, தகாத வார்த்தைகளால் விமர்சிப்பது, சமூகத்தில் கடும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

மிகவும் அரசியல் முதிர்ச்சியுள்ள முக்கிய அமைச்சர் ஒருவர், தகாத வார்த்தைகளால் விமர்சித்து இருப்பது கல்விச் சமூகத்தை கொதி நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. யார்? யாரை? விமர்சனத்துக்கு உட்படுத்துவதாக இருந்தாலும், வார்த்தைகளுக்கு எல்லை இருக்க வேண்டும்.

எனவே, கௌரவத்துக்குரிய

அமைச்சர்களே! ....

அரசியல் முக்கியஸ்தர்களே.... !

பிரச்சினைகளுக்கு சுமூக தீர்வு காண வேண்டுமானால், வார்த்தைகளுக்கு அணைகட்டுகள். இதுதான் எமது பணிவான வேண்டுகோள்.

கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.
+94 77 6965343
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com
ceditorsaga@gmail.com

குறள் விருந்து

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வது அஃதொப்ப தில்**

சோதனைகளை எதிர்த்து வெல்லக் கூடியது, அந்தச் சோதனைகளைக் கண்டு கலங்காமல் மகிழ்வுடன் இருக்கும் மனம்தான்.

# வார்த்தைகளுக்கு அணை கட்டுங்கள்

**அ**ன்னாந்து துப்பினால் முகத்தில் தான் விழும் என்பது யதார்த்தமான உண்மை. புவியீர்ப்பு விதி இதுவாக இருந்தாலும் சாதாரண பாமரனுக்கும் இது நன்கு புரியும்.

இந்த உண்மை தெரிந்திருந்தும் அரசாங்க அமைச்சர்கள் சிலரும், ஒரு சில அதிகாரிகளும் ஏன் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்பது தான் இன்றைய பேசுபொருளாக இருக்கின்றது.

எரிபொருள் விலை அதிகரித்ததால் அது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வரை வந்திருக்கிறது. 'எய்தவன் இருக்க அம்பை நோகியவன்' கதையாகத்தான் பூதாகரம் எடுத்திருக்கிறது. இதேபோல, ஆசிரியர்களின் ஆவேசமும், ஆர்ப்பாட்டங்களும் இன்னொரு வடிவில் வெடித்திருக்கிறது.

கொத்தலாவல பல்கலைக்கழக சட்ட மூலத்தை எதிர்த்து ஆசிரியர் தொழிற்சங்கங்கள் பாராளுமன்ற சுற்றுவட்டம் அருகில் ஆர்ப்பாட்டம் ஒன்றை கடந்த திங்கட்கிழமை நடத்தினர். இதன் போது, அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட தொழிற்சங்க முக்கியஸ்தர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள். நீதிமன்றம் இவர்களை பிணையில் செல்ல அனுமதித்த போதும், தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் இவர்கள் அனைவரும் முல்லைத்தீவில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்திவைக்கப் பட்டுள்ளார்கள்.

இதற்கு எதிராக, அனைத்து ஆசிரியர் சங்கங்களும் போர்க்கொடி எழுப்பி உள்ளதோடு, ஜேவிபி போன்ற கட்சிகளும் களமிறங்கி கோஷம் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

அமைதியாக நடந்த போராட்டத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தியவர்கள் பாதுகாப்புத் தரப்பினரே என்பது தெளிவாக தெரிகிறது. சிவில் உடையில் வந்த சில பொலிஸ் அதிகாரிகள், தொழிற்சங்க முக்கியஸ்தர்களை அடையாளம் கண்டு, குண்டுக் கட்டாகத் தூக்கிச்சென்று பஸ்களில் ஏற்றியதை காட்சி ஊடகங்கள் வாயிலாக காணமுடிந்தது.

சுகாதார நெறி முறைகளை பின்பற்ற வேண்டியது சகலரதும் அத்தியாவசிய கடமை. இது தொழிற்சங்கங்களுக்கும் விதிவிலக்காக இருக்க முடியாது. உயிர்கள் ஆயிரக்கணக்கில் காவு கொள்ளப்படும் நிலையில், இப்படியான ஆர்ப்பாட்டமொன்று அவசியம்தானா? என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. கேள்வியில் நியாயம் இல்லாமல் இல்லை. அதற்கும் அப்பால், ஜனநாயக உரிமையையும் மறுக்க முடியாது.

கொத்தலாவல பல்கலைக்கழக உத்தேச சட்டமூலம், இலவச கல்விக்கு ஊறுவிளைவிக்கும் நடவடிக்கையென சுட்டிக்காட்டும் தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவையும் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் கொண்டதாக இந்தப் பல்கலைக்கழகச் சட்டமூலம் வழிவகுக்கிறது என்று அடித்துச் சொல்கின்றனர்.

ஆசிரியர் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதிப்பதற்கு இது தகுந்த நேரம் இல்லை என்ற விமர்சனங்களை அரசாங்கத் தரப்பு முன்வைத்தாலும், இந்த இக்கட்டான நேரத்தில் அரசாங்கம் அவசர அவசரமாக இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற முயல்வதற்கான காரணம் என்ன என்று தொழிற்சங்கங்கள் கேள்வி எழுப்புகின்றன.

எதுவென்றாலும், ஆர்ப்பாட்டம் நடத்துவதும் பேரணி செல்வதும் தொழிற்சங்கங்களின் அடிப்படை உரிமை. அப்படியானவர்களை, அடாத்தாக கைது செய்து, தனிமைப்படுத்தி வைப்பது என்பது மக்கள் விரோத செயல்பாடாகவே பார்க்கப்படுகின்றது.

மிகுதி 2ஆம் பக்கம்

# செப்டம்பரில் நாடு முழுமையாக திறப்பு?



**கொ**ரோனா வைரஸ் பரவலில் பாரிய மாற்றங்கள் ஏற்படாவிட்டால் எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் நாடு முழுமையாக திறக்கப்படுமென கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் செப்டம்பர் மாதத்துக்குள் நாட்டில் அனைவருக்கும் ஒரு தடுப்பூசியாவது பெற்றுக் கொடுக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு தடுப்பூசிகளும் பெற்றுக்கொண்டு வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கான அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதத்தில் 15 மில்லியன் தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைக்கவுள்ளதாக தெரிவித்துள்ள அவர் 08 மில்லியன் சைனோபாம் தடுப்பூசிகளும் ஒன்றரை மில்லியன் மொடர்னா தடுப்பூசிகளும் அவற்றில் உள்ளடங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசிகள் பெற்றுக் கொடுக்கப்படுமென ஜனாதிபதி தெரிவித்த போது அது தொடர்பில் சில தரப்பினர் பல்வேறு பிரசாரங்களை முன்னெடுத்தனர். எனினும் தற்போது போதியளவு தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றன. சுமார் இரண்டு இலட்சம் பைஸர் தடுப்பூசிகள் மேலும் இரண்டு மில்லியன் சைனோபாம் தடுப்பூசிகளும் மிக விரைவில் நாட்டுக்கு கிடைக்கவுள்ளன. மொத்தமாக சுமார் 05 மில்லியன் தடுப்பூசிகள் எமக்கு கிடைக்கவுள்ளன.

ஜூலை இறுதிக்குள் கொழும்பு மாவட்டத்தில் அனைவருக்கும் தடுப்பூசி பெற்றுக்கொடுக்கப்படுவதுடன் ஒகஸ்ட் மாத இறுதிக்குள் மேல்மாகாணம் முழுவதற்கும் தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கைகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம். அதன் படி செப்டம்பர் மாதத்திற்குள் நாட்டிலுள்ள அனைவருக்கும் ஒரு தடுப்பூசியாவது பெற்றுக் கொடுக்கப்படுமென உறுதியாக கூறலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே டெல்டாவின் ஆட்டம் நாட்டில் ஆரம்பமாகியிருக்கிறது. கொழும்பு யாழ்ப்பாணம் உள்ளிட்ட நாட்டின் பல இடங்களில் 19 பேர் கொரோனா வைரஸின் டெல்டா திரிபுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி யாழ்ப்பாணம் கிளிநொச்சி பிலியந்தலை கொழும்பு ஆகிய இடங்களில் டெல்டா திரிபுடன் கூடிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை 38 பேர் கொரோனா வைரஸின் டெல்டா திரிபுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

மாதிரிகளை பெறுவது மருத்துவமனைகளில் கூட குறைவடைந்துள்ளது ஆபத்தான பகுதிகள் என கருதப்படும் இடங்களை சோதனை செய்து முன்கூட்டியே பரவலை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் இடம்பெறவில்லை எனவும் தெரிவித்துள்ள அவர் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள தரவுகள் யதார்த்தத்தை வெளிப்படுத்தவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சு பிசிஆர் சோதனைகளை அதிகரித்து மரபணுஆய்வுகளையும் அதிகரிக்காவிட்டால் அடுத்த நான்குவாரங்களில் நான்காவது அலை உருவாகலாம் என மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான கல்லூரியின் தலைவர் ரவிகுமுதேஸ் எச்சரித்துள்ளார்.

டெல்டா திரிபு இலங்கை முழுவதும் வியாபிக்கும் அச்சுறுத்தல் உள்ளதாக ஹேமந்த ஹேரத் ஏற்கனவே தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில்இருந்து படிப்படியாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

# இலவச கல்விக்கு பாரிய அச்சுறுத்தல்!



உத்தேச கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் இலவச கல்விக்கு விடுக்கப்படும் பாரிய அச்சுறுத்தலாகும். அதனை தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுப்போமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கும் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலம் தொடர்பாக அவர் விடுத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்படுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையின் தேசியப் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் தேவையான உயர் கல்வியை வழங்குவதற்காக சேர்ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை மேலும் வலுப்படுத்த வேண்டியது தேசிய ரீதியிலான தேவையாக இருப்பதை நாங்கள் அனுமதிக்கின்றோம்.

என்றாலும் அந்த அடிப்படை தேவைக்கு அப்பால் சென்று இலவசக் கல்வியை அழிப்பதற்கு உயர் கல்வி கட்டமைப்புக்கு அப்பால் ஒரு நிறுவனம் ஸ்தாபிக்கப்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அரசாங்கம் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையின் மூலம் உயர் கல்வியின் ஆரோக்கியத் தன்மை, தரம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இறையாண்மை முழுமையாக இல்லாமல் போவதுடன் இலவசக் கல்வியும் பாரிய பிரச்சினைக்குள்ளாகும்.

அதனால் இலவசக்கல்வி மற்றும் அதன் உரிமையாயாளர்களின் சுதந்திரம் மற்றும் போராட்டங்களின் பெயரால் உத்தேச சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்றார்.

இதேவேளை அச்சட்டமூலத்தை எதிர்த்து கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்தபோது இலஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டோர் கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களது கைது தொடர்பாக நாட்டில் பல இடங்களிலும் ஆர்ப்பாட்ட கண்டனங் ஊர்வலங்கள் நடைபெற்றுவருகின்றன. முன்னாள் அமைச்சர் இராதாகிருஸ்ணன் உள்ளிட்ட பல அரசியல் தலைவர்களும் கைதான தொழிற்சங்கத் தலைவர்களை விடுதலை செய்யுமாறும் கேட்டுவருகின்றனர்.

ஆசிரியர்கள் இணையவழி நிகழ்நிலை கற்பித்தலிலிருந்து விலகுமாறு ஏனைய முன்னணி ஆசிரியர்சங்கங்களும் அழைப்புவிடுத்துள்ளனர்.

எனினும் அரசாங்கத்தின் முக்கிய இளம் அமைச்சரான நாமல் ராஜபக்ஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் மாணவர்கள் மீது அனுதாபம் காட்டி கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு மீள திரும்பவும் அமைச்சர் நமல் ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து பேசவும் அவர்களின் போராட்டங்களை முன்னெடுக்கவும் தொழிற்சங்கங்களுக்கு உரிமை உண்டு. எவ்வாறாயினும் மற்றொரு நபர்களின் அடிப்படை உரிமைகள் தங்கள் உரிமைகளைச் செயல்படுத்த முயற்சிப்பதில் மீறப்பட்டால் அதை உண்மையான தொழிற்சங்க நடவடிக்கை என்று கூற முடியாது.

குழந்தைகளுக்கு கல்வி கற்பது ஒரு தேசிய போராட்டம் என்றும் இதுபோன்ற முயற்சிகளை கைவிட வேண்டும் என்றும் ஆசிரியர்களை அமைச்சர் நாமல் ராஜபக்ச கேட்டுக் கொண்டார். ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்துடன் கலந்துரையாடலாம் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்தவேளை தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஜோசப் ஸ்டாலின் அணியினர் அங்கும் ஆர்ப்பாட்டத்திலீடுபட்டதாகவும் அது தொடர்ந்தால் தனிமைப்படுத்தல் சட்டம் அவர்கள்மீது பாயும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நாங்கள் இன்றுடன் 6 ஆவது நாளாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நான் உட்பட 16 பேரின் பி.சி.ஆர் சோதனை முடிவுகள் எதிர்மறையாக வந்துள்ளன என அவர் தெரிவித்துள்ளார். பொலிஸார் எங்களை கொழும்பிலிருந்து வலுக்கட்டாயமாக இங்கு அழைத்து வந்தனர்.

சோதனை முடிவுகள் எதிர்மறையாக இருக்கும்போது ஏன் எங்களை இங்கே வைத்திருக்கிறார்கள் என்று நாங்கள் அரசாங்கத்திடம் கேட்கிறோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல பல்கலைகழக சட்ட மூலத்திற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைதுசெய்து தனிமைப்

மிகுதி 2ஆம் பக்கம்

# கல்முனைப்பிராந்தியம் மீண்டும் ஆபத்தில்!

## அவதானமாயிருங்கள்

## மாகாண சுகாதார பணிப்பாளர் தௌபீக்



**கிழக்கில் முதலாவது அலையில் அதிகூடிய உச்சத்திலிருந்த கல்முனைப்பிராந்தியம் 2ஆம் 3ஆம் அலைகளின் போது தொற்றுக்களும் மரணங்களும் குறைந்து இறுதிக்கட்டத்திலிருந்தது. ஆனால் அண்மைக்காலமாக மீண்டும் அங்கு தொற்றுக்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதைக் காணக்கூடியதாயுள்ளது. மக்கள் மிகவும் அவதானமாயிருக்கவேண்டும்.**

**இவ்வாறு கூறுகிறார் கிழக்கு மாகாண சுகாதாரசேவைப்பணிப்பாளர் வைத்தியகலாநிதி டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் .**

**கிழக்கு மாகாணத்தில் கொரோனா நிலைவரம் தொடர்பாக 'கல்முனைநெற்' வாராந்த மின்னிதழ் சார்பாக கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவரிடம் கண்ட செவ்வியை கல்முனை நெற் வாசகர்களுக்காக இங்கு தருகிறோம்.**

**கிழக்கின் இன்றைய கொரோனா நிலையை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

எமது மாகாணத்தில் திருகோணமலை மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டம் கல்முனைப் பிராந்தியம் அம்பாறைப் பிராந்தியம் என 4பெரும் சுகாதாரப் பிரிவுகளுள்ளன. அவற்றுள்ள திருகோணமலை மற்றும் அம்பாறை பிரிவுகள் தொற்று குறைவாகஇருந்தாலும் கல்முனை மட்டக்களப்பு பிரிவுகளில் தாக்கம் கூடுதலாக இருக்கின்றன. எனவே எமது மாகாணத்தில் கொரோனா தாக்கவேகம் குறைவது போலிருந்தாலும் ஆபத்து நீங்கவில்லை. எதிர்வரும் காலங்கள் விடுமுறை போயா பெருநாள் தினங்கள் ஆகையால் மக்கள் அவதானமாக விருக்கவேண்டும். அலட்சியத்தோடு நடந்தால் பெரும் ஆபத்து எம்மை காத்திருக்கிறது என்பதை மறந்துவிடவேண்டாம்.

**இறுதியாக கிடைத்த முடிவுகளின்படி என்ன நிலைவரம்?**

கிழக்கு மாகாணத்தில் கடந்த 24மணிநேரத்தில் 168பேர் கொரோனாத் தொற்றுக்கிலக்காகியுள்ளனர். அவர்களில் அதிகூடிய தொற்றுக்கள் கல்முனை மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் ஏற்பட்டுள்ளன .கடந்த 24மணிநேரத்தில் அங்கு 56பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. அதிலும் பொத்துவிலில் 18பேரும் நிந்தவூரில் 10பேரும் அக்கரைப்பற்றில் 9பேரும் கூடுதலாக பதிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே கிழக்குமாகாண மக்களிடம் அன்பாக கேட்பதென்னவென்றால் சுகாதார நடைமுறை விதிகளை தொடர்ந்து பின்பற்றுமாறு குறிப்பாக மாஸ்க் அணிவதை மறக்கவேண்டாம் என்று மாகாணப்பணிப்பாளர் என்ற வகையில் கேட்டுக்கொள்கிறேன்.

**யூலை மாதம் தொடங்கி 15தினங்கள் கடந்தவிட்டன. இந்நிலையில் கடந்த இரு வாரங்களில் ஏற்பட்ட விளைவுகள் நிலைவரங்கள் பற்றிக்கூறமுடியுமா?**

கடந்த இருவாரங்களில் 1540பேர் கிழக்கில் தொற்றுக்குள்ளாகியுளனர். அவர்களுள் மட்டக்களப்பில் 800பேரும் கல்முனையில் 500பேரும் திருமலையில் 109பேரும் அம்பாறையில் 150 பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதேபோல இருவாரங்களில் கல்முனைப் பிராந்தியத்தில் ஆகக்கூடிய 15பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளனர். மட்டக்களப்பில் 13பேரும் திருமலையில் 4பேரும் அம்பாறையில் 3பேரும் பலியாகியுள்ளனர்.

**கிழக்கில் மரணங்கள் 300 ஐத் தாண்டியிருப்பதாக கூறப்படுகின்றது. அது பற்றிக்கூறுங்கள்?**

கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தீநுண்மியின் தாக்கத்தினால் உயிழந்தவர்களின் எண்ணிக்கை 314 ஆக அதிகரித்துள்ளது. . இவர்களில் 288பேர் மூன்றாவது அலையில் மரணித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**கிழக்கில் தொற்றுக்கள் 16ஆயிரத்தை தாண்டியிருப்பதாக கூறப்படுகின்றது.அது பற்றிக்கூறுங்கள்?**

தொற்றுக்களின் எண்ணிக்கை 16ஆயிரத்தை கடந்துள்ளது. நேற்று(16) வரை 16839பேருக்கு கொரோனாத்தொற்று ஏற்பட்டுள்ளது.இவர்களில் 15863பேர் குணமாகி வீடு சென்றுள்ளனர்.666பேர் சிகிச்சைபெற்றுவருகின்றனர். நேற்று 168பேருக்கு தொற்று இனங்காணப்பட்டிருந்தது.

**கிழக்கில் இரண்டாவது வக்சீன் டோஸ் ஏற்றப்பட்டுள்ளது. அது பற்றி தகவசல் தரமுடியுமா?**

பதில்: ஆம். கிழக்கு மாகாணத்தில் இரண்டாவது டோஸாக 71495 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. மட்டு.மாவட்டத்தில் 47642பேருக்கும் அம்பாறை பிராந்தியத்தில் 14146 பேருக்கும் திருமலை மாவட்டத்தில் 9725பேருக்கும் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளன.

**நேர்காணல்**
**வி.ரி.சகாதேவராஜா**

**அப்படியெனின் முதலாவது வக்சீன் டோஸ் வெற்றிகரமாக ஏற்றப்பட்டதா?**

பதில்: ஆம் முதல் தொகுதியில் 75ஆயிரம் வக்சீன்கள் கிடைத்தன. முதலாவது டோஸில் கிழக்கு மாகாணத்திற்கென வழங்கப்பட்ட 75ஆயிரம் சைனோபாம் தடுப்பூசிகளில் 74ஆயிரத்து 901ஊசிகள் ஏற்றப்பட்டுள்ளன. மட்டு.மாவட்டத்தில் 24995பேருக்கும் அம்பாறை பிராந்தியத்தில் 24991 பேருக்கும் திருமலை மாவட்டத்தில் 24915பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளன.

**கல்முனையில் தொற்று அதிகரித்திருப்பதாகக்கூறுகிறீர்கள். அப்படியெனின் அங்கு தடுப்பூசி இன்னும் செலுத்தப்படவில்லை. அங்கு புறக்கணிப்பு இடம்பெற்றிருப்பதாக ஊடகங்கள் சமூகவலைத்தளங்கள் பதிவிட்டுள்ளன. அது பற்றி?**

அதில் உண்மை இல்லாமலில்லை. கிழக்கில் முதலாவது தடுப்பூசி 75ஆயிரம் வந்தபோது அன்றையநிலையில் தொற்றுக்கூடிய பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்கி அதனைப்பிரிப்போம் என்று கூறி திருமலை மட்டக்களப்பு அம்பாறை என 3பிரிவுகளுக்கும் தலா 25ஆயிரம் ஊசிகள் வழங்கப்பட்டது. அப்போது கல்முனையில் தொற்று குறைவாகஇருந்தது. அதனால் அது விடுபட்டது. எமது சுகாதாரத்துறையினரும் ஏன் அரசியல்வாதிகளும் இதற்கான வேண்டுகோள்களை விடுத்திருந்தார்கள். கல்முனைப்பிராந்தியத்திற்கு தடுப்பூசி செலுத்தும் பணி கடந்த திங்கட்கிழமை(12) முதல் ஆரம்பிக்கப்படும் என்று கூறப்பட்டது. எனினும் இதுவரை மத்தியஅமைச்சிலிருந்து உறுதியான தகவல் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. பெரும்பாலும் மாத இறுதியில் கிடைக்கப்பெறலாம். அவ்வாறு கிடைக்கும்பட்சத்தில் உடனடியாக அவற்றை வழங்க தயார்நிலையிலுள்ளோம் .

**அதற்கான முன்னாயத்தவேலைகள் அங்குள்ள 13சுகாதாரப்பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?**

அதற்கான முன்னாயத்தவேலைகள் 13 சுகாதாரப்பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அங்கு 60வயதுக்கு மேற்பட்டோர் கர்ப்பிணித்தாய்மார்கள் தொழிற்சாலை ஊழியர்கள் வைத்தியசாலை மற்றும் சுகாதாரஅலுவலகங்களில் பணியாற்றுவோர் வீட்டிலிருக்கும் நெருங்கிய உறவுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி செலுத்தப்படவிருக்கின்றன.அதேவேளை பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு கிழக்குமாகாணமெங்கும் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன. வைத்தியசாலைகள் சுகாதாரஅலுவலகங்கள் குறித்த நிலையங்கள் போன்றவற்றில் அவை வழங்கப்படவிருக்கின்றன. அந்தந்த சுகாதாரவைத்தியஅதிகாரிகள பொதுசுகாதாரபரிசோதகர்கள் கிராமசேவையாளருடன் தொடர்புகொண்டு அவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளலாம் .

**இதுவரை கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் அன்ரிஜனின் தொகை எந்தளவில் உள்ளது?**

இதுவரைகாலமும் கிழக்கில் அன்ரிஜன் பிசிஆர் என 1லட்சத்து 53ஆயிரத்து 656பேருக்கு சோதனை செய்யப்பட்டுள்ளது.

**இறுதியாக என்ன கூற விளைகிறீர்கள்?**

எமது மாகாணத்தில் கொரோனா தாக்கவேகம் குறைவது போலிருந்தாலும் ஆபத்து நீங்கவில்லை. எதிர்வரும் காலங்கள் விடுமுறை போயா பெருநாள் தினங்கள் ஆகையால் மக்கள் அவதானமாகவிருக்கவேண்டும். எனவே கிழக்குமாகாண மக்களிடம் அன்பாக கேட்பதென்னவென்றால் சுகாதார நடைமுறை விதிகளை தொடர்ந்து பின்பற்றுமாறு குறிப்பாக மாஸ்க் அணிவதை மறக்கவேண்டாம். அலட்சியத்தோடு நடந்தால் பெரும் ஆபத்து எம்மை காத்திருக்கிறது என்பதை மறந்துவிடவேண்டாம்.

# தன்னைத்தானே பட்டை தீட்டும்

## ஈழக்கவி ரசிக்குமார்



மட்டக்களப்பு வெல்லாவெளி விவேகானந்தபுரம் எனும் கிராமத்தில் பிறந்த தெ.ரசிக்குமார் ஈழக்கவி எனும் புனைப் பெயருடன் கவித்துறையில் பயணிக்கிறார். ஆரம்ப கல்வியை மட்/விவேகானந்தபுரம் திருக்கொன்றை முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் தரம் ஐந்துக்கு பின் மட்/வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்றவர் காலத்தின் சூழலினால் எட்டாம் வகுப்போடு படிப்பை தொடர முடியாது போக கடையில் வேலைக்கு சென்றார்.

சிறிய வயதில் திக்கி திக்கி பேசுவதால் அதிகம் பேசாமல் தனிமையை நாடினார். இதனை அவதானித்த கடைக்கார முதலாளி தம்பி உனக்கு திக்குவாய் போய் நன்றாகவே பேச ஒரு மருந்து வாசிப்பு என்று தட்டிக்கொடுக்க புத்தகங்களை சத்தமாக வாசிக்க ஆரம்பித்தவருக்கு திக்குவாய் இருந்த இடம் தெரியாமல் ஓடியது பக்குவமாய் தமிழ் குடி கொண்டது. தன்னை அறியாமலேயே தமிழ் உணர்வும் உருவாக சமூகத்திற்கு நல்ல பல விடையங்களை செய்வதென்றால் கல்வி கற்று இருக்க வேண்டும் அல்லது கலைத்துறையயிலாவது இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தார். கவிதைகளில் சமூக சிந்தனைகளை நிரப்பி வந்த இவருக்கு பூங்காவனம் இராவீந்திரன் அவர்கள் தமிழமுது கவிச்சாரில் எனும் குழுமத்தினூடாக அடித்தளமிட்டு கொடுத்தார். இதிலிருந்து பல்வேறு சஞ்சிகைகள், வானொலிகள், பத்திரிகைகள் என்பவற்றினூடாக கவிதைகளை வழங்கியவருக்கு மூத்த படைப்பாளியான கவிக்கோ வெல்லவூர்க் கோபால் கவிஞர் ஆ.மு.சி.வேலழகன் பாடசாலை அதிபர் த.விவேகானந்தன் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் போரதீவுப்பற்று பிரதேச கலாசார உத்தியோகத்தர் எழுத்தாளரும், ஊடகவியலாளருமான.க.மோகனதாஸ் இசையமைப்பாளர் விமல் என பலரும் இவரது படைப்புக்களுக்கு பக்கபலமாக இருந்தனர்.



தனது முதல் தொகுப்பான முட்களின் மேல் உறங்கிய இரவுகள் எனும் புதுக்கவிதை நூலினை 2018ம் ஆண்டு வெளியீடு செய்தார். தற்போது பட்டிருப்பு பாலமும் படுவான் கரை மண்ணும், மற்றும் முளைக்கத் தவிக்கும் விதைகள் இந்த இரண்டு நூல்களும் வெளியிட தயார்படுத்திக் கொண்டிருக்கிறார். இவரது எழுத்துக்களுக்கு இதுவரை புரட்சி கவிஞன்ஈழக்குயில் சாரல் கவிஞன் போன்ற விருதுகளும் பல ஆளுமைகள் கையொப்பமிட்ட சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் கௌரவிப்புக்களாக கிடைக்கப் பெற்றுள்ளன.


இதுவரை இவரது வரிகளில் ஐந்து பாடல்கள் இசையமைக்கப்பட்டு வெளியீடு செய்யப்பட்டுள்ளன.நாற்பதுக்கும் மேற்பட்ட பாடல்கள் எழுதி வைத்திருக்கிறார். அவற்றுக்கெல்லாம் காலம் கனியும் என்ற நம்பிக்கையை மனதில் வைத்துக் கொண்டு விரைவில் மீண்டுமொரு இசை இறுவட்டு விவேகானந்தபுரம் நாகலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு வெளியிட தயாராகி கொண்டிருக்கிறார். தனது குடும்ப சுமையையும் சுமந்த வண்ணம் கலைத்துறையில் சாதிக்கும் இலட்சியக் கனவுகளோடு பயணிக்கும் ஈழக்கவி படுவான்கரை மண்ணுக்கு ஒரு பெருமை. இவரது ஒவ்வொரு முயற்சிக்கு பின்னாலும் இவரது தந்தை தெய்வநாயகம் தாய் இராசமலர் மனைவி திவ்வியா மூவரும் பெருந்துணையாக நிற்பது ரசிக்குமாரின் கலைப் பயணத்துக்கு பெரும் பலமாக இருக்கும். பாடசாலை கல்வியை தாண்டி கலைத்துறை சிறந்த படைப்பாளியை உருவாக்கும் என்பதற்கு சிறந்த உதாரணம் ஈழக்கவி ரசிக்குமார் இவரது எதிர்பார்ப்புகள் நிறைவேற எமது நல்வாழ்த்துகள்.




# கைவினை உற்பத்தி முயற்சியாளராக வளரும்

## முபஸிரா

கைவினை உற்பத்தி முயற்சியாளராக வளரும் முபஸிரா மாத்தளையில் நிஸ்பர் ரபீக்கா தம்பதிகளுக்கு மகளாக பிறந்த முபஸிரா சிறு வயதிலேயே தந்தையை இழந்து தாயின் அன்பிலும் அரவணைப்பிலும் வளர்ந்தவர். சிறு வயதிலேயே கைவினை பொருட்கள் மீதிருந்த ஆர்வம் 2018 இல் இவரையும் ஒரு கைவினை உற்பத்தியாளராக மாற்றியது. அறபுக் கல்லூரியில் கல்வி கற்ற போதிருந்தே இவ்வாறான கைவினை படைப்புகள் மீது ஒரு ஈர்ப்பு இருந்ததால் சிறு வயதில் இருந்தே சில கைவினை உற்பத்திகளை செய்து பல சான்றிதழ்களும், பரிசும் வாங்கினார். 2018 டிசம்பர் 1ஆம் திகதி தனது முதல் கைவினை உற்பத்தியான கைவினை பரிசுப் பொருட்களை **(handmad gifts)** உற்பத்தி செய்தார். பயிற்சியோ வழிகாட்டல்களோ இன்றி **mubaceration.lk** எனும் பெயரில் தன் எண்ணத்தில் உதித்த பொருட்களை புதித புதிதாக உருவாக்கினார்.



ஆரம்பத்தில் எல்லோரின் கேள்விகளும் இவரை தாழ்மைப்படுத்தியது வியாபாரமாக ஆரம்பிக்க தன்னிடம் போதுமான பணம் கூட இருக்கவில்லை ஆனாலும் கிடைக்கும் பொருட்களை வைத்து கைவினை உற்பத்திகளை செய்ய ஆரம்பித்தார். 18 வயதில் ஆரம்பித்து தொடர்ச்சியாக தன் வீட்டு பொழுதுபோக்காக உற்பத்திகளை செய்து வருகின்றார். தனது கற்பனையில் வரும் ஒவ்வொன்றையும் கைகளால் உருவாக்கி பார்ப்பதில் மிகவும் ஆர்வமுள்ளவர். எங்கேயாவது கைகளால் செய்த பொருட்கள் கண்டால் அதை தானும் செய்து பார்க்கவேண்டும் என்று எப்படியாவது செய்து விட்டுத்தான் மறு வேலைபார்ப்பார். வாழ்க்கையில் இவ்வாறான கைவினை பொருள்களை உற்பத்தி செய்வதில் வந்த ஆர்வமும் ஆசையும் வேறு எதிலும் தனக்கு வந்ததில்லை என கூறுகிறார்.

நிறைய கஷ்டங்களையும் பிரச்சினைகளையும் தாண்டி இந்த வியாபாரத்தில் முன்னேறுவேன் என்ற நம்பிக்கையில் தன் உழைப்பை தொடர்ந்தார். இன்ஸ்டாகிராம், முகநூல் வலையொளி பக்கம் என பல சமூக ஊடகங்களினூடாக விற்பனை முயற்சிகளை முன்னெடுத்தார். ஆரம்பத்தில் ஒரு மாதத்திற்கு ஒரு ஓடர் வருவதே கஷ்டமாக இருந்தாலும் இவர் முயற்சியில் பின்வாங்கவில்லை. இப்பொழுது ஓடர்களுக்கு குறைவில்லாமல் வளர்ந்து நிற்கிறார்.

காகிதங்கள் உட்பட பல கழிவுப் பொருட்களை பயன்படுத்தி செய்யப்படும் பல உற்பத்தி பொருட்கள் வாடிக்கையாளர்கள் மனதில் இடம்பிடித்துள்ளது. இவரது எதிர்கால கனவு **www.mubcreations.lk** எனும் தளத்தினூடாக உலகம் பூராக தனது வியாபாரத்தை மேற்கொள்ள வேண்டுமென்பதே. தொடர் பயிற்சியும் முயற்சியும் ஒருவரை உயர்த்தும் என்பதற்கு முபஸிரா சிறந்த எடுத்துக்காட்டு. இவரது வருங்கால இலட்சியம் இனிதே வெற்றி காண வாழ்த்துக்கள்.

# வித்துவான் F.X.C நடராஜா

## வாரம் ஒரு படைப்பாளி

மட்டக்களப்பு மண்ணின் வரலாற்றை~ அதன் வாசனையை எடுத்து சொன்னவர்களுள் மகா வித்~ துவான் திரு F.X.C நடராஜா அவர்கள் முன்னோடியாக இருந்~ திருக்கிறார்.இவர் இலங்கை அரச~ கரும மொழித்துறையில் தமிழ் ஆ ராய்ச்சி துணைவராக கடமையாற் றியவர்.இவர் யாழ்ப்பாணம் கரைநகரில் 21.07. 1911 ஆண்டு பிறந்தவர். இறந்தது எப்போது என்று தெரியாது. இவர் மகா வித்துவான் என்றும் எழுத்தாளர் என்றும் பலராலும் அறியப்பட்டவர். இவர் காரைநகர் அம்பல சட்டம்



பியார்,சுழிபுரம் அதிபர்,க.சிவபாதசுந்தரம் . ஆகியோரிடம் தமிழ் இலக்கண,இலக்கியங்களை ஆரம்பத்தில் கற்றுள்ளார். பின்னர் சுவாமி விபுலானந்தரை குருவாகக் கொண்டு பாலபண்டிதம் கற்றார். அதன் பின்னர் இவர் மட்டக்களப்புக்கு வந்துள்ளார். மட்டக்களப்பு கத்தோலிக்க பாடசாலைக~ ளில் ஞான சகோதரர்களின் ஆதரவில் வளர்ந்தவர். மட்டக்களப்பு மத்திய வீதி யில் நிரந்தரமாக வசித்துள்ளார்இந்த கால~ க்கட்டத்தில் இவர்,அருட்சகோதரர் இன்னாசிமுத்து, அருட்சகோதரர் பிலிப் ஆகியோரிடமும் கல்வி கற்றுள்ளார். .இவர் எழு~ திய நூல்களாக மட்டக்களப்பு மான்மியம் எண்ணெய் சிந்து,மொழிபெயர்ப்பு மரபு,இலங்கை சரித்திரம்,ஈழத்து நாட்டார் பாடல்கள்,என்று பல நூல்களை எழுதியுள்ளார். நான் அறிந்த வகை யில் இவரின் மட்டக்கள~ ப்பு மான்மியம்என்ற நூல்~ தான் மட்டக்களப்பு வரல~ ற்றை முதலில் சொன்ன நூலாக இருக்கும் என்று நினைக்கிறேன்.இருந்தாலும் இதில் பல தரவுகள்,விஷ யங்கள்,விடுபட்டு இருந்~ தன,அவற்றை கருத்தில் கொண்டு பின்பு வெளிவந்த நூல்கள் மட்டக்கள~ ப்பு வரலாற்றை விள~ க்கமாக,விரிவாக சொல்லி இருக்கின்றன.குறிப்பாக வி~ த்துவான்,வி.சி.கந்தையா, ஈழத்து பூராடனார்,வெல்ல~ லயூர் கோபால். செல்வி. க. தங்கேஸ்வரி போன்றவர்கள் மட்டக்களப்பின் வரலாற்றை தங்கள் பார்வை,~ கருத்தியல் தழுவி எழுதி வெளியிட்டுள்ளார்கள். ஆனால் முதலில் தனது தேடலின்மூலம் வெளியிட்ட பெருமை வித்துவான் கு.ஒ.ஊ நடராஜா அவர்களயே சாரும்.. அமரர் கு.ஒ.ஊ நடராஜா அவர்கள் இன்று எம்மிடையே இல்லாவிட்டாலும் அவரின் தமிழ் அறிவும்,ஆ~ ற்றலும்,மட்டக்களப்பு மண்ணுக்கு அவர் செய்த சேவையும்என்றும் நினைவு கொள்ளக்கூடியதே. வாழ்க அவர் புகழ் நாமம்,

கோவிலூர்
செல்வராஜன்

# கொ ரோ னா

மனித மதி வென்று
புவி மீதினில்
விதி வென்று
வாழுதடா!

கதியென்று காலான்
கை பிடித்ததனால் ~ சைனா
சதி செய்து
ஆளுதடா!

உறவாடி உயிர் திங்க
உடலுக்குள் நடமாடித்
திரியுதடா!

விடமாட்டோம்
என்றவனையழிக்க
மருத்துவ மாநாடே
நடக்குதடா!

எண்ணிலாவுயிர்கள்
செத்துக் கண்ணெதிரே
அழியுதடா!

தொழிநுட்ப வளர்ச்சியினால்
தொற்று நோயும் பரவுதடா!

கல்வி கலைந்ததனால்
கனவெல்லாம் நொருங்குதடா!
உண்பதற்கே உணவின்றி ~ உயிர்கள்
துன்பத்தில் வாடுதடா!

கடலிலே மீன் பிடிக்க
கைகோர்த்துப் போனோமடா!
அங்கு கப்பல் கருகியொரு
வாசம் வீசுதடா! ~ மனிதா
எமைப் போல் அங்கும்
கடலினங்கள் அழியுதடா!

கடவுளோ கண்டிருப்பார்
இதைக் கனவிலும் நாம்
காணவில்லை

நிலையிலா வாழ்க்கையென்று
எல்லாம் நிகழ்ந்த பின்
தோன்றுதடா!

# கிடைக்கப்பெற்றோம்......

## யுக்தி


கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இவ்வாண்டு முதல் வெளியிடும் 'யுக்தி' எனும் காலாண்டுச் சஞ்சிகை நேற்று(16) வெள்ளிக்கிழமை வெளியிட்டுவைக்கப்பட்டது.
கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் இத்திணைக்களத்தைப் பாரமெடுத்த பிற்பாடு கிழக்கில் பல வகையான கலாசார பண்பாட்டு செயற்பா~ டுகள் முடுக்கிவிடப்பட்டதை உலகறியும்.


அந்தவகையில் காலாண்டு சஞ்சிகையொன்றை 'யுக்தி' என்ற மகுட~ த்தின்கீழ் கிரமமாக வெளியிடப்படவேண்டும் என்ற நோக்கில் கடந்~ தவருடம் முயற்சிஎடுத்திருந்தபோதிலும் கொரோனா நச்சுயிரி யின் அகோரப்பார்வை யுக்தியின் மீதும் வீழ்ந்தது. அதன்காணரமான கடந்தவருத்திலோ இவ்வருட ஆரம்பத்திலோ வெளியிடமுடியாத துர்ப்பாக்கிய நிலை எழுந்தது.

விழா வைத்து இந்த சஞ்சிகையை வெளியிட விரும்பினாலும் சமகால கொரோனா நிலைமை அதனை தடுத்திருக்கிறது. எனவே இன்னும் தாமதிக்காமல் அச்சஞ்சிகையை மின்னாமல் முழங்காமல் எளிமையாக வாசகர்கள் கரங்களில் தவழவிட்டிருக்கிறார் பணிப்பாளர் ச.நவநீதன்.

60 பக்கங்களை கொண்ட வர்ணத்திலான அதன்பிரதியொன்று எம~ க்கும் கிடைக்கப்பெற்றிருக்கிறது. வாழ்த்துகள். தொடரட்டும் யுக்தி.

ஆ~ர்



திருகோணமலைப் படைப்பாளிக~ ளில் நையாண்டியில் சமூக அவல~ ங்களையும், சீர்திருத்தங்களையும் சொல்லவல்ல ஈழத்துக் கவிஞரே தாம~ ரைத்தீவான் என்கிற சோ. இராசேந்திரம்.

இதுவரையில் பன்னிரெண்டு கவிதை நூல்களை எழுதிய இவரின் பதின்மூன்றாவது நூலே முருகியம் எனும் கவிதை இலக் கியமாகும். இது 2021.02.10 அன்று கொரோனா அச்சம் காரணமாக திரு கோணமலையில் அவருடைய இல்ல~ த்தில் வைத்தே வெளியிடப்பட்டது.

முதற்பதிப்பு ~ 10.02.2021
கவிதைகள் ~ 60
பக்கம் ~ 69
விலை ~ 200/-

# பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில உரிமைகள்




ஜெனிதா மோகன்

கோஷ்டி பாலியல் வல்லுறவு ~ ஒரு பெண், ஆட்கள் கோஷ்டியினால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்க~ப்படும்போது அக்கோஷ்டியிலுள்ள ஒவ்வொருவரும் 20 வருடங்களுக்கு நீடிக்கப்படக்கூடியதும் ஆகக் குறைந்தது 10 வருட கட்டாய மறியற் தண்டனையாலும் தண்டத்தினாலும் தண்டிக்கப்பட பொறுப்பாவார்.

குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவர் பாதிக்கப்பட்ட~வருக்கு நட்ட ஈடு செலுத்தவும் பொறுப்பாவார். பிரிவு 364(2)( g) தண்டனைச் சட்டக்கோவை

பராயமடையாதவரின் பாலியல் வல்லு~றவு ~ எவராவது ஒருவர் 16 வயதுக்குட்பட்ட பெண்ணுடன் அவளின் சம்மதமுடனோ, அன்றியோ பாலியல் உடலுறவில் ஈடுபட்டால் அவர் பாலியல் வல்லுறவு குற்றம் புரிந்தவராவார்

தவறாளர் 20 வருடங்களுக்கு நீடிக்கப்படக்கூடியதும் ஆகக் குறைந்தது 10 வருட மறியற் தண்டனையாலும் தண்டத்தாலும் தண்டிக்கப்பட பொறுப்பாவார். அவர் பாதிக்கப்பட்டவருக்கு நட்ட ஈடு செலுத்த பொறுப்பாவார். பிரிவு 364(2)(e), தண்டனைச்சட்டக்கோவை

பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் ~ ஒரு பெண்ணின் வாய்க்குள் குதத்தினுள் அல்லது அவளது உடலின் வேறு பாகத்தினுள் எவரேனும் ஒரு ஆண் தனது ஆணுறுப்பை அல்லது வேறு ஏதேனும் உட~ற்பாகத்தை பயன்படுத்தி பாலியல் திருப்தியை அடைய செய்யும் செயலில் ஈடுபட்டால் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோக குற்றம் புரிந்தவராகின்றார். பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் பாலியல் வல்லுறவு குற்றத்திற்கான அதே தண்ட~னையால் தண்டிக்கப்பட பொறுப்பாகும். பிரிவு 365B, தண்டனை சட்ட கோவை.

குறைந்தபட்ச சிறை தண்டனை 5 வருடங்களாகும். பாதிக்கப்பட்டவர் சிறுவராயின் 7 வருடங்கள் ஆகும்

பெண்களின் பாலியல் சுரண்டல். அதாவது எவ~ரேனும் ஒருவர் தெரிந்து கொண்டு 18 வயதுக்~குட்பட்ட பெண்ணை பாலியல் துஸ்பிரயோ~கம் செய்யும் நோக்கத்திற்காக அல்லது ஏதாவது பாலியல் நடவடிக்கையில் பங்குபற்ற ஏதாவது இடத்தில் வைத்திருக்க அனுமதிப்பின் அவர் சிறுவர் பாலியல் சுரண்டல் குற்றம் புரிகின்றார்.

இக்குற்றம் 20 வருடங்கள் நீடிக்கப்படக்கூடியதும் ஆகக் குறைந்தது 5 வருட கட்டாய மறியற் தண்ட~னையாலும், தண்டத்தாலும் தண்டிக்கப்படக்கூ~டியதாகும். பிரிவு 360B, தண்டனை சட்டக்கோவை


## கடந்து வந்தால் போதும்....



கட்டிய சேலையுடன்
கண் கலங்காமல் வந்துவிடு
காலம் முழுவதும் கூட
இருப்பேன் என்று
கை கோர்த்து நடந்தவன்
அன்று ஒரு நாள்

கண்ணீர் உன் சொத்து
கவலை உன் உறவு
காலம் முழுவதும் கதியற்று
வாழு
கலங்கத்துடன் என்று
கை கழுவி சென்றான் சில
நாட்களில்

கலங்கவில்லை அவள்
கற்ற கல்வி கூட இருக்கிறது
கண்ட வலிகளை கடந்து
செல்ல
கற்றுவிட நினைத்தால்
கடுகளவு நம்பிக்கையுடன்
களம் இறங்கினாள்
கடந்திட நினைத்தால் வலி~
களை எல்லாம்
உதறி சென்றவன் முன்
உயர்ந்திட நினைத்தாள்
உயரப் பறந்தாலும்
ஊர்க்குருவி பருந்தாகுமா
என்றார்கள்
மெல்ல சிரித்து
மெதுவாக நடந்தாள்
மெட்டி போட்டவள்
மேடை ஏறமாட்டாளா?
உளநல நிபுணராணாள்
உறவு என்று கூட்டிச்
சென்றவன்
உச்சி வெயிலில் விட்டுச்
சென்றவன்
வேதாளம் முருங்கை மரம்
ஏறுதென்றவன்
உள நோயாளியாக
அவள் முன் நின்றான்
காலம் மாற்றும்
கடந்து வந்தால் போதும்






# மகாகவி பாரதியார்

## வாழ்க்கை வரலாறு

சுப்ரமணிய பாரதியார் அவர்கள், சின்னசாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக 1882 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் சுப்பிரமணியன். அவருடைய 5 வயதில் அவரு~டைய தாயார் காலமானார். இவர் இளம் வயதிலேயே தமிழில் புலமை பெற்றுத்திகழ்ந்தார். சிறு வயதிலேயே பாரதியாருக்கு தமிழ் மொழி மீது சிறந்த பற்றும், புலமையும் இருந்தது. ஏழு வயதில் பள்ளியில் படித்துவரும்பொழுது கவிதைகள் எழுதத் தொடங்கினார். தன்னுடைய பதினொரு வயதில் கவிபாடும் ஆற்றலை வெளிப்படுத்தினார், இவரு~டைய கவிப்புலமையை பாராட்டிய எட்டயபுர மன்னர், இவருக்கு பாரதி என்ற பட்ட~த்தை வழங்கினார். அன்று முதல் இவர் சுப்பிரமணிய பாரதியார் என அழைக்கப்பெற்றார்.

பாரதியார் அவர்கள், பள்ளியில் படித்துகொண்டிருக்கும் பொழுதே 1897 ஆம் ஆண்டு செல்லம்மா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். தனது தந்தையின் இறப்புக்குப் பிறகு பாரதியார் வறுமை நிலையினை அடைந்தார். சிறிது காலம் காசிக்கு சென்று தங்கியிருந்~தார். பிறகு எட்டையபுர மன்னரின் அழைப்பை ஏற்று அரசவை கவிஞராக பணியாற்றினார்.

'மீசை கவிஞன் என்றும் முண்டாசு கவிஞன் என்றும் தமிழ் இலக்கிய உலகம் போற்றும் பாரதியார், தாய் மொழியாம் தமிழ் மொழியின் மீது மிகுந்த பற்றுடையவராக திகழ்ந்தார். இவர் சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலும் தனி புலமைப்பெற்று விளங்கினார். 1912 ஆம் ஆண்டு கீதையை தமிழில் மொழிப்பெயர்த்தார். கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் ,புதிய ஆத்திசூடி போன்ற புகழ் பெற்ற காவியங்கள் பாரதியரால் எழுதப் பெற்றது.பெண் விடுதலைக்காகவும், தீண்டாமை ஒழிப்புக்கும் பாடுபட்டார். சுதந்திரப் போரில், பாரதியின் பாடல்கள் உணர்ச்சி வெள்ளமாய், காட்டுத்தீயாய், சுதந்~திரக் கனலாய் தமிழ்நாட்டை வீறுகொள்ளச் செய்தது. பாரதியார் இந்திய பத்திரிக்கையின் மூலம் மக்களிடையே விடுதலை உணர்வை தூண்டும் வகையில் பல எழுச்சியூட்டும் கட்டு~ரைகளை எழுதினார். பாரதியின் எழுச்சிக்கு, தமிழ்நாட்டில் பலத்த ஆதரவு பெருகுவதைக் கண்ட பிரிட்டிஷ் ஆட்சி இந்தியா பத்திரிக்கைக்கு தடை விதித்து அவரை கைது செய்து சிறையிலும் அடைத்தது. அதுமட்டுமல்லாமல், விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்~தால், பாரதி தேசிய கவியாக அனைவராலும் போற்றப்பட்டார். இவர் சுதேசிமித்திரனில் உதவி ஆசிரியராக, நவம்பர் 1904 முதல் ஆகஸ்ட் 1906 வரை பணியாற்றினார். ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று சுதந்திரம் அடைவ~தற்கு முன்பே தன்னுடைய சுதந்திர தாகத்தை தன் பாட்டின் மூலம் வெளிபடுத்தியவர். மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

இவர் ஒரு கவிஞர் மட்டுமல்லாமல் ஒரு எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், சமூக சீர்~திருத்தவாதி , மற்றும் தன்னுடைய பாட்டுக~ளின் மூலமாக சிந்தனைகளை மக்களிடம் தட்டியெழுப்பியவர். தம் தாய்மொழியாம் தமிழ்மொழி மீது அளவுகடந்த பற்று~க்கொண்ட இவர், யாமறிந்த மொழிக~ளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் என்று போற்றி பாடியுள்ளார்.

1921 ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருவல்லிகேணியில் உள்ள பார்த்தசாரதி கோவிலுக்கு சென்றபோது, எதிர்பாரா விதமாக அந்த கோவில் யானையால் தூக்கி எறியப்பட்டதால் பலத்த காயமுற்று மிகவும் நோய்வாய்ப்பட்டார். பிறகு, 1921 செப்டம்பர் 11ம் தேதி, தனது 39 ஆவது வயதில் இவ்~வுலக வாழ்விலிருந்து விடுதலைப் பெற்றார். பாரதியை மக்கள், கவி, மானுடம் பாடவந்த மாகவி , புது நெறி காட்டிய புலவன், எண்ணத்தாலும் எழுத்தாலும் இந்~திய சிந்தனைக்கு வளம் சேர்த்தவர், பல்~துறை அறிஞர், புதிய தமிழகத்தை உருவாக்க கனவு கண்ட கவிக்குயில், தமிழின் கவிதை மற்றும் உரைநடையில் தன்னிகரற்ற புலமை பெற்ற பேரறிவாளர், என்றெல்லாம் புகழகின்றனர். உலகதமிழர் நாவில் மக்கள்கவி பாரதியாரின் பெயர் அடிக்கடி உச்சரி~க்கபடுகிறது என்றால் அது மிகையாகாது.

## கண்டுபிடிப்புகளும் அறிஞர்களும்

1. மின்பல்பு ~ தாமஸ் ஆல்வா எடிசன்
2. தொலைபேசி ~ கிரகாம்பெல்
3. தொலைகாட்சி ~ து. டு. பெயர்ட்டு
4. கார் ~ கார்ல் பென்ஸ்
5. குளிர்சாதனப் பெட்டி ~ ஜேம்ஸ் ஹாரிசன்

த.குகரீஸ்
விபுலானந்த மத்திய கல்லூரி
காரைதீவு





# முடி வளரவும் பேன், பொடுகு தொல்லை நீங்கவும் கை மருத்துவம்

சீத்தாப்பழ விதைகளைக் காயவைத்துப் பொடி செய்து சிறிதளவு எடுத்துச் சீயக்காயில் கலந்து தலையில் தேய்த்துக் குளித்துவந்தால் ஈறு, பேன் தொல்லை குறையும்.

வசம்பைத் தண்ணீர்விட்டு அரைத்துத் தலையில் நன்றாகத் தேய்த்து ஊறவைக்க வேண்டும். பிறகு, தண்ணீரில் தலை முடியை நன்றாக அலசினால் பேன் தொல்லை குறையும்.

துளசி இலையை நன்றாக மையாக அரைத்து, தலையில் தடவிச் சிறிது நேரம் ஊறவைக்க வேண்டும். பின் வெதுவெதுப்பான நீரில் தலையைக் கழுவினால், பேன்கள் செத்து உதிர்ந்துவிடும். கூந்தலும் நன்றாக வளரும்.

உப்பு கலக்காத 50 கிராம் வேப்பம்பூவை, 100 கிராம் தேங்காய் எண்ணெயில் போட்டு நன்கு காய்ச்ச வேண்டும். எண்ணெயைத் தலையில் நன்றாகத் தேய்த்து அரை மணி நேரம் ஊறவைத்துக் குளித்தால், பேன் தொல்லை குறையும்.

வால் மிளகை ஊறவைத்துப் பால் விட்டு அரைத்துத் தலையில் தடவி ஊறிய பின் குளிக்க, பேன் தொல்லை குறையும்.

வேப்பிலைத் தூள் ~ அரை டீஸ்பூன், கடுக்காய்த்தூள் ~ அரை டீஸ்பூன், வெந்தயத்தூள் ~ 2 டீஸ்பூன், பயத்தமாவு ~ 2 டீஸ்பூன், எலுமிச்சைச்சாறு 1 டீஸ்பூன் ஆகியவற்றுடன் வெந்நீரைக் கலந்து தலையில் பூசிக்கொண்டு, பத்து நிமிடம் கழித்து அலசிக் குளித்தால் பேன் தொல்லை குறையும்.

அரளிப்பூவை தலையில் வைத்துக் கொண்டால் பேன் தொல்லை அகலும்.

வேப்ப எண்ணையுடன் தேங்காய் எண்ணைய் கலந்து தலைக்கு தடவி, ஒரு மணி நேரம் ஊறவைத்தபின்னர் குளிக்கவும். தொடர்ந்து 3 வாரங்களுக்கு இப்படி தேய்த்துக் குளித்து வர, நீண்ட நாட்களாக இருந்த ஈர், பொடுகு மற்றும் பேன் தொல்லை குறையும்.

வேப்பிலையை அரைத்து தலையில் தடவி விட்டு சிரிது நேரம் கழித்து அலசி விடுங்கள். பேன் ஒழிந்து விடும். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை இப்படி செய்யலாம்.

தூங்கும் போது தலையனை மீது வேபபிலை மற்றும் துளசி இலைகள் பரப்பி அதன் மேல் ஒரு துணி போட்டு தூங்க வைக்கலாம். இதனால் பேன் தொல்லைகள் ஒழியும்.




# கொத்தமல்லி இலையில் உள்ள மருத்துவ குணங்கள்

கொத்தமல்லி இலைகளில் பல்வேறு வைட்டமின்கள், கனிமச் சத்துக்கள் நிறைந்துள்ளன. இதன் விதை, காரம், கசப்பு, துவப்பு, இனிப்பு என 4 விதமான சுவைகளை கொண்டது.

பச்சை தங்கம் என்று கூறப்படும் கொத்தமல்லி சிறந்த மருத்துவ குணங்களை கொண்டுள்ளது. உடல் நலத்திற்கு பல அறிய நன்மைகளை அள்ளித்தரும் ஒரு முக்கியமான மூலிகை கொத்தமல்லி இலை. ஏராளமான மருத்துவ குணங்களை கொண்ட கொத்தமல்லி இலைகளை குடும்பத் தலைவிகள் அன்றாடம் சமையலுக்கும் பயன்படுத்தி வருகிறார்கள். இந்த கொத்தமல்லியை சமையலில் சேர்க்காதவர்களே இல்லை என்று கூட சொல்லலாம்.

உணவை அலங்கரிக்கவும், கம கமவென வாசனைக்காகத்தான் பயன்படுத்தி வருகிறோம் என பலரும் நினைக்கிறார்கள். ஆனால் இதன் மருத்துவ குணத்தை பற்றி தெரிந்திருந்த நம் முன்னோர்கள் சமையலில் தவறாது கொத்தமல்லி இலைகலளை சேர்த்து வந்துள்ளனர்.

கொத்தமல்லி இலைகளில் பல்வேறு வைட்டமின்கள், கனிமச் சத்துக்கள் நிறைந்துள்ளன. இதன் விதை, காரம், கசப்பு, துவப்பு, இனிப்பு என 4 விதமான சுவைகளை கொண்டது.

உடலின் செரிமான சக்தியைத் தூண்டி, உண்ட உணவை நன்கு சீரணம் ஆகச் செய்யும் தன்மை கொத்தமல்லிக்கு உண்டு
புளித்த ஏப்பம்,நெஞ்செரிச்சல் போன்ற பிரச்சனைகளையும் சரி செய்கிறது. இரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவை பெருமளவு குறைக்க உதவுகிறது
வாய்ப்புண்களை குணப்படுத்தும் தன்மை கொண்டது
கண் நரம்புகளில் உள்ள வறட்சியைப் போக்கி கண்ணை பலமடையச் செய்யும்.
கர்ப்பிணிகள் கர்ப்பம் தரித்த மாதத்தில் இருந்து கொத்தமல்லியைச் சாப்பிட்டு வந்தால் குழந்தை மிக ஆரோக்கியமாக வளரும்
தினமும் நாம் உண்ணும் உணவில் ஏதோ ஒரு விதத்தில் கொத்தமல்லியை சேர்த்து வந்தால் நோயற்ற ஆரோகியமான வாழ்வை மகிழ்ச்சியுடன் வாழலாம்.

# பாதாம் பருப்பு



பாதாம் பருப்பில் மாங்கனீசியம், செம்பு போன்ற தாதுப் பொருள்கள் அடங்கிய பாதாம் பருப்பு எலும்புகளை வலுப்படுத்தி, கவர்ச்சிகரமான தோற்றத்தை அளிக்கும். பாதாம் பருப்பில் பயோடின், வைட்டமின் பி12, இ ஆகிய சத்துகள் அடங்கியுள்ளன. வைட்டமின் இ சத்து அதிகம் காணப்படுவதால் இதய நோய்கள், புற்றுநோய், வயதானவர்களுக்கு வரும் அல்சைமர் நோய் ஆகியவற்றைத் தடுக்கும் ஆற்றல் உள்ளது. பாதாமில் கார்போஹைட்ரேட் குறைவாகவும், புரதச்சத்தும், நார்ச்சத்தும் அதிகமாகவும் காணப்படுகிறது. பாதாம் பருப்பு உடல் எடையைக் குறைக்கவும் உதவுகிறது.

அவ்வப்போது ஒரு கை நிறைய வேர்க்கடலை, முந்திரிப் பருப்பு மற்றும் பாதாம் பருப்பு எடுத்துச் சாப்பிட்டு வந்தால் இதயம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் ஏற்படாது.

# உடற்பயிற்சி செய்வதற்கு எது சரியான நேரம் தெரியுமா.?



நம் அனைவரையும் பொறுத்தவரையில் உடற்பயிற்சி செய்வதற்கு மிக சரியான நேரம் காலை நேரம் என்று தான் எண்ணுகிறோம். ஆனால் இது முற்றிலும் தவறானது. உடற்பயிற்சி என்பது நமது உடலுக்கும், மனதுக்கும் புத்துணர்ச்சியும், உற்சாகமும் தரக்கூடியதாக இருக்க வேண்டும். அப்போது தான் நாம் உடற்பயிற்சி செய்வதில் ஒரு பலன் இருக்கும்.

நாம் காலையில் உடற்பயிற்சி செய்வதை விட மாலை நேரத்தில் உடற்பயிற்சி செய்வது தான் உடலுக்கு மிகவும் நல்லது என ஆய்வுகள் கூறுகிறது.






# அதிர்ச்சி தரும் ஆராய்ச்சி முடிவுகள் !



டிவி நாடகங்களில் வரும் அழுகைகள், குமுறல்கள், ஒப்பாரிகள், உரக்க கத்திப் பேசுதல், சோகஇசைகள் மற்றும் சாவுமேளதாளம் இசைகள் இவையெல்லாம் உங்கள் வீட்டில் இருக்கும் லக்ஷ்மிகடாக்ஷத்தை சீர்குலைத்து கெடுத்துவிடும். இதனால் அபசகுனமான நிகழ்ச்சிகளின் காட்சிகள் வுரக்குள் நடந்தாலும் அதன் ஒளிஒலி அதிர்வுகளின் நிகழ்வுகள் நமது வீட்டிற்குள்ளேயே நடப்பதால் குடும்பத்தில் பல பிரச்சனைகள் உருவாகும் என்பது அசைக்க முடியாத ஆன மீக நம்பிக்கையாளர்களின் ஆய்வு ஆகும்.

இதனால் பலநோய்கள் வரலாம். வீட்டில் பணம் தங்காமல் போகலாம், வீண் செலவுகள் ஏற்படலாம் தொழில் நஷ்டம் ஏற்படலாம், என்று இப்படிப்பட்ட அதிர்ச்சி தரும் ஆன்மீக ஆய்வு முடிவுகள் ஒரு பக்கம் எச்சரிக்கை செய்கிறது.. அதை சமயம் ஆன்மீகநம்பிக்கை இல்லாதவர்களுக்கும் அதிர்ச்சி தரும் மருத்துவ ஆராய்ச்சி ஆய்வுமுடிவுகள் மிகவும் அபாயகரமானதாக உள்ளது.

ஆம்...!!!

உங்கள் உடல் நலத்தையும் சீரழித்துவிடும் அதிர்ச்சி ரிப்போர்ட்...

இதனால் கண்பார்வை கோளாறில் ஆரம்பித்து மனஇறுக்கம், மனஅழுத்தம், மனநோய் வந்து... உடல்எடை அதிகரித்து.....

இதன் தொடர்ச்சியாக...

சர்க்கரை வியாதி, மாரடைப்பு, இருதயக்கோளாறு, ரத்தஅழுத்தம், கழுத்து எலும்பு தேய்மானம், தலைசுற்றல், தலைவலி, மூளை மற்றும் நரம்பியல் சம்பந்தமான பிரச்சனைகள் வரும்...

இதற்கு எல்லாம் முக்கியமான காரணம்....

பிறரை எப்படிக்கெடுப்பது, அழிப்பது, துன்புறுத்துவது, கணவன்-மனைவிக்குள் ஒருவரை ஒருவர் ஏமாற்றி கள்ளக்காதல் தொடர்பு எப்படி என்று கற்றுக்கொடுக்கப்படுகிறது.... குடும்பத்தினருக்குள் மாமியார்-மருமகள் சண்டை, அண்ணன் தம்பி சண்டை சந்தேகப்படுவது, சகுனிவேலை பார்ப்பது, எல்லாம் கற்றுக்கொள்ளலாம். எப்படி லஞ்சம் பெறுவது!!! கற்றுக்கொள்ளலாம் அதோடு...!!

நேர்மையான அரசுஅதிகாரிகளை எப்படி லஞ்சம் வாங்கியது போல் திட்டமிட்டு மாட்டி விடுவது என்றும் கற்றுக்கொடுக்க படுகிறது

பிறர் தொழிலை எப்படி கெடுப்பது? எப்படி நம்பிக்கை துரோகம் செய்வது என்பது எல்லாம் காண்பிக்கப்பட்டு மக்களுக்கு பழக்குவிக்கப்படுகிறது. இவையெல்லாம் விட பெரியபேரிழப்பு உங்கள் அருமை குழந்தைகளின் விலை மதிப்பற்ற எதிர்காலம் பாழாக்கப்படுகிறது... இத்தனை பாதிப்புகள் தெரிந்ததும் தொலைக்காட்சி நிறுவனங்கள் தங்கள் வுசீ ரேட்டிங் அதிகரித்திட சுயலாபத்துக்காக இப்படி பட்ட மக்களைச்சீரழிக்கும் டிவி சீரியல்கள் தயாரித்திட முக்கியத்துவம் தருகிறது..

தயவுசெய்து மக்களே,
இது போன்ற கேவலமான நாடகங்களை புறக்கணியுங்கள்.. நாம் புறக்கணித்தால் தானே வுசீ ரேட்டிங் குறைந்தால் தொலைக்காட்சி நிறுவனங்கள் மக்களை சீரழிக்கும் சீரியல்களை தானே நிறுத்தி விடுவார்கள்

நமது செயல் மட்டும் இல்லை எண்ணங்களும் நமது கர்மா தான்

எனவே உங்கள் விலைமதிப்பில்லா ஓய்வுநேரத்தை அன்பான குழந்தைகள் மற்றும் வீட்டில் உள்ள கணவன், மனைவி, பெரியவர்களோடும் சிரித்து பேசி பாசத்துடன் பழகி வாழ்க்கையை அனுபவியுங்கள் குறைந்த நேரம் நல்லதொலைக் காட்சி நிகழ்ச்சிகளை பாருங்கள் மற்ற நேரங்களில் நல்ல புத்தகங்களை படியுங்கள்.. . கிடைக்க கூடிய பொன்னான நேரங்களில் பிறருக்கு நன்மை செய்யும் நல்லகாரியங்களிலும் ஈடுபடுங்கள் இல்லையேல் வரும் பலன்களை நல்லதோ கெட்டதோ நீங்கள் தான் அவற்றை **TV** பார்த்து உருவாக்கினீர்கள் என்பதை உணர்ந்து அனுபவிக்க தயாராகுங்கள்.....

அல்லதை விடுத்து நண்பர்களே...!!

நல்லதை பாருங்கள் கேளுங்கள்
பேசுங்கள்
சிந்தியுங்கள்
வாழ்வில் எல்லாம் நல்லதாய் நடக்கும்
........
வாழ்க வளமுடன் & நலமுடன்

தீதும் நன்றும் பிறர் தர வாரா நம்மைச்சுற்றி நடப்பனவற்றுக்கு நாமே பொறுப்பு........

எண்ணம் போல் வாழ்க்கை

## ஒன்று வாங்கினால் மற்றொன்று இலவசம்

உதாரணத்திற்கு...
கோபத்தை வாங்கினால் இரத்தக் கொதிப்பு இலவசம்!
பொறாமையை வாங்கினால் தலைவலி இலவசம்!
வெறுப்பை வாங்கினால், வேண்டாத பகை இலவசம்!
கவலையை வாங்கினால், கண்ணீர் இலவசம்!
மாறாக....
நம்பிக்கையை வாங்கினால், நண்பர்கள் இலவசம்!
உடற்பயிற்சியை வாங்கினால், ஆரோக்கியம் இலவசம்!
அமைதியை வாங்கினால், ஆனந்தம் இலவசம்!
நேர்மையை வாங்கினால், நித்திரை இலவசம்!
அன்பை வாங்கினால்.....
அனைத்து நன்மைகளும் இலவசம்.
இலவசமாக எது வேண்டுமென்று இன்றேனும் முடிவு செய்யுங்கள்..

# நுண்நிதிக் கடன்
## கடன் பெறுநறுக்கு இது ஒரு சுமையா?

**கலாநிதி எஸ். செந்தில்நாதன்**

பொருளாதார விருத்தியை ஏற்படுத்தும் நோக்கில், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வறுமையைப் போக்கும் பொருட்டு அறிமுகம் செய்யப்பட்ட சிறு முதலீட்டாளர்களுக்கான ஒரு சிறுகடன் வசதியே ,ந்த நுண்நிதிக் கடன் முறையாகும். அத்தகைய சில நாடுகளில் இது அபி விருத்தியில் பெரும் பங்காற்றினாலும், சில நாடுகளில் குறிப்பட்டளவிற்குப் பொருளாதார விருத்தியில் சாதக பலன்களைக் கொடுக்கவில்லை. அவ்வகையில், நுண்நிதிக் கடன்கள் மூலம் வறுமையைப் போக்காது பயணிக்கும் நாடுகளில் ,லங்கையும் ஒன்றாகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி (**ADB** 2007) நுண்நிதியை, குறைந்த வருமானம் உடையோரின் சேமிப்பு, கடன், பணப்பரிமாற்றம், சேவைக் கட்டணச் செலுத்துகை, அவர்களுக்கான காப்புறுதி மற்றும் அவர்களது வர்த்தக நிதித்தேவைகளைப் பராமரித்தல் போன்றவற்றைமிகப்பரந்ததாகவரையறைசெய்கிறது.

இலங்கையில் காணப்படும் நுண்நிதிக் கடன் துறையில் முறைசார் நிறுவனங்களாக அரச, தனியார் மற்றும் அரச-சார்பற்ற அமைப்புகளும் முறைசாரா தனியார் அமைப்புகளும் காணப்படுகின்றன. பொதுவாக, வணிக முயற்சியாண்மையை விருத்தி செய்வதன்மூலம் குறை வருமானம் உடையோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நுண்நிதிக் கடன் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது. எனினும், ,லங்கையில் இந் நோக்கமானது சற்று விரிவாக்கப்பட்டதாக கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து, கழிவிட வசதிகள், நோய்த் தடுப்பு, பெண்களது வலுவூட்டல் மற்றும் வாழ்வாதாரம், சமூகப் புனர்வாழ்வு, கிராம கட்டுமான உருவாக்கம் போன்றவற்றினை மேம்படுத்துதற்கு ஏதுவாகவும் நுண்நிதிக் கடன் துறையில் உள்ள நிறுவனங்களது நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

நுண்நிதிக் கடன் நிறுவனங்களது நிர்வாகக் கட்டமைப்புகள், அந்நிறுவனங்களது வரையுபடுத்தப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு, தம் ,யக்கரீதியிலான செயற்பாடுகளைத் தமது உயர்மட்ட, நடுத்தர மற்றும் கீழ் மட்ட ஊழியர்கள் மூலம், தம்மிடம் கடன் பெறுவோர்மீது, வணிக முயற்சியாண்மையை விருத்தி செய்வதான நடவடிக்கைகளையும் செயற்பாடுகளையும் முன்னிறுத்தி, தம் நிறுவனரீதியான நோக்கங்களை அடைய முயற்சிக்கின்றன. நடைமுறையில் இது, நுண்நிதிக் கடன் நிறுவனங்களது நிர்வாகக் கட்டமைப்பு, கடன் பெறுவோரது நோக்கங்களை அவர்களது முன்நோக்கிய பார்வைக்கேற்றவாறு அடைந்து கொள்வதையும் அதனை உறுதி செய்வதனையும் வலிமையுடையதாகத் தெளிவாக்கவில்லை. ,தனை ,க்கட்டுரையானது, நுண்நிதிக் கடன் நிறுவனங்களது நிர்வாகக் கட்டமைப்புகள், கடன் பெறுவோரது நோக்கங்களை அவர்கள் அடைந்து கொள்வதை உறுதிப்படுத்தும் விதமாக மறுசீரமைக்கப்படுதலை அல்லது மாற்றங்கள் ஏற்படுத்தப்படுதலை நியாயப்படுத்துகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நுண்நிதி வரைபைக் கருதுவதாக, ,லங்கையில் காணப்படும் நுண்நிதிக் கடன் நிறுவனங்கள் குறை வருமானம் உடையோரின் சமூக பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி விருத்தி செய்வதில் குறிப்பிட்டுப் சொல்லும்படியான பங்கினை அண்மைக் காலங்களில் ஆற்றவில்லை என்றே குறிப்பிடலாம். இதனை, பெருமளவிலான நுண்கடன் பெறுநர்கள் தம்கடன்களை மீளச் செலுத்தாது இருப்பதனை நுண்நிதிக் கடன் நிறுவனங்களது அண்மைக்காலத் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன (**Priyankara & Sumanasiri** 2019). இது நுண்நிதிக் கடன் நிறுவனங்களது தேற்றரீதியிலான கட்டமைப்புகள் எந்தளவிற்கு கடன் பெறுநர்களது தேவைகளை மையமாகவும் அவற்றைப் பூர்த்தி செய்பவனவாகவும் அமையப் பெற்றுள்ளன என்பதை வினாவத் தூண்டுகிறது.

நாளாந்தம் பத்திரிகைகளில், நுண்நிதிக் கடன் பெறுநர்களது தற்கொலைகள், தற்கொலை முயற்சிகள், அவர்கள் முகம் கொடுக்கும் சமூக பொருளாதார கல்விசார், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு போன்ற இடர்கள் கடனை மீளச் செலுத்த முடியாத விளைவுகளாக காணப்படுகின்றன. இவை மேலும் நுண்நிதிக் கடன் நிறுவனங்களது தேற்றரீதியிலான கட்டமைப்புகள், கடன் பெறுநர்களது முன்நோக்கில் வரைபு செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்கின்றன. மறுபுறத்தே, நுண்நிதிக் கடன் பெறுநர்க்கு அக்கடன் ஒரு சுமையாகி நிற்கிறதா என்பதுவும் ,ங்கு தொங்கி நிற்கிறது.

நடைமுறையில், அண்மைக்காலங்களாக, இலங்கையிலுள்ள நுண்நிதிக் கடன் நிறுவனங்கள் குறைந்த வருமானம் உடையோரின் சமூக பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி விருத்தி செய்வதனை முதன்மைப்படுத்தாது, தமது வர்த்தக ரீதியிலான ,லாப உழைப்பனை நோக்கிப் பயணிக்கின்றன. ,ந்நிலைமை, நுண்நிதிக் கடன் நோக்கங்களையும் அதனூடே அடைய வேண்டிய நுண்கடன் பெறுவோரின் வலுவாக்கத்தினையும் மழுங்கச் செய்வதாக அமைந்துள்ளது. இதனால், நுண்நிதிக் கடன் துறை நோக்கத்தினை அடையவதற்கும் நுண்கடன் பெறுவோரின் வலுவாக்கத்தினை அவர்களது முன்நோக்கிய பார்வையில் மேம்படுத்துதற்குமான தேற்ற ரீதியிலான ஒரு நடைமுறைசார் கட்டமைப்பு, நுண்கடன் துறையில் உள்வாங்கப்பட வேண்டிய தேவையை ,க்கட்டுரை வலியுறுத்தி நிற கிறது. மற்றும், ,து தொடர்பான விரிவாக்கப்பட்ட ஆய்வுகள், உண்மை நிலையை எடுத்தியம்பும் வகையில் சீராக முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதையும் விரைந்து பரிந்துரைக்கின்றது.




# சொர்ணம்
## நகை மாளிகை

## கல்முனை மாநகரில் இல 212, கிளை புதுப்பொலிவுடன்...... திறந்து வைக்கப்பட்டது




**தங்க நகை உலகில் கடந்த ஐந்து தசாப்தங்களாக மங்கா புகழ் படைத்து வரும் சொர்ணம் நகை மாளிகை கல்முனை மாநகரில் 1972 ஆம் ஆண்டு அதன் ஸ்தாபகரும் உரிமையாளருமான தேசபந்து முத்துப்பிள்ளை விஸ்வநாதன் (JP) முதலாவது கிளையை ஆரம்பித்தார். இன்று கல்முனை மாநகரில் மூன்று கிளைகளுடனும் களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு நகர் கொழும்பு என பல இடங்களில் சொர்ணம் நகை மாளிகை வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெற்ற நகையகமாக காட்சியளிக்கின்றது.**

**கல்முனையில் 212 ஆம் இலக்கித்தில் இயங்கி வந்த சொர்ணம் நகையகம் தற்போது புதுப் பொலிவுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது.**












நகை தொழிலில் ஐம்பது அண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டு வருகின்றோம். நான் பிறந்து வளர்ந்தது ஓந்தாச்சிமடம். 1972 ஆம் ஆண்டு கல்முனையில் சொர்ணம் நகையகத்தை ஆரம்பித்தேன். இத்தனை வருட காலம் சொர்ணம் நகை மாளிகை எனும் நாமத்துக்கு நன்மதிப்பு தொடர்கின்றமைக்கு காரணம், வாடிக்கையாளர்களின் திருப்திக்கும், நம்பிக்கைக்கும் தரத்திற்கும் நாங்கள் கொடுக்கும் முக்கியத்துவமும் கவனமும் ஆகும்.

கல்முனையில் மூன்று கிளைகளையும் களுவாஞ்சிக்குடியிலும் மட்டக்களப்பிலும் ஒவ்வொரு கிளைகளையும் கொழும்பில் **நியு ரத்தின மஹால்** என வாடிக்கையாளர்களின் நன்மை கருதியும் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் கிளைகளை அமைத்தோம். அவையும் சிறப்பாக உள்ளன.

கல்முனை மாநகரில் 212 ஆம் இலக்கத்தில் இயங்கிய கிளையை புதுப்பொழிவுடன் செப்பனிட்டு தற்போது திறந்துள்ளோம். இலங்கை முழுவதும் எமது நிறுவனத்துடன் நேரடியாக தொழில் புரியும் 250 க்கு மேற்பட்ட ஊழியர்கள் உள்ளார்கள். எங்களது கிளைகளுடாக ஆபரணம் செய்யும் தொழிலில் ஈடுபடுவோர், அவர்களோடு தொடர்புபட்டு தொழில்புரிவோர் என ஆயிரத்துக்கும் அதிகமானோர் உள்ளனர்.

அனர்த்தங்கள் ஏற்படும் போது எங்களால் முடிந்த உதவிகளையும் அவ்வப்போது செய்து வருகின்றோம். தற்போது உள்ள கொவிட் காலப்பகுதியிலும் கடந்த ஆண்டு நிவாரணப்பணிகளை முன்னெடுத்திருந்தோம். இவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கிய சுகாதார துறை பாதுகாப்பு துறை அனைவருக்கும் நன்றிகளை தெரிவிக்கின்றோம். கொவிட் காலம் வியாபாரத்திற்கு சவாலாக இருந்தாலும் வாடிக்கையாளர்கள் திருப்பதியடையும் வகையிலும் எமது ஊழியர்களும் பாதிக்கப்டாதவகையிலும் சுகாதார நடைமுறைகளுடன் முடிந்தவரை சவால்களை சமாளித்து வியாபாரத்தை முன்னெடுத்துவருகின்றோம்.

நன்றி

**தேசபந்து**
**முத்துப்பிள்ளை விஸ்வநாதன்(JP)**
**உரிமையாளர்**
**சொர்ணம் நகை மாளிகை**










# ஆடி அள்ளித்தரும் நன்மைகள் கோடி!



## இன்று ஆடிப்பிறப்பு

## ஆடி மாதச் சிறப்புகள்

தமிழ் மாதங்களில் ஆடி மாதம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஆடி மாதத்தை அடிப்படையாக வைத்துதான் பல சுப நிகழ்ச்சிகளை முன்னோர்கள் நடத்தினர். ஆடியை 'கற்கடக மாதம்' என்றும் அழைக்கிறார்கள்.

இன்று(17) ஆடி பிறக்கிறது. இதனை ஆடிப்பிறப்பு என்பர். ஆடிமாதத்திலே முருகாலயங்களில் ஆடிவேல் விழா நடப்பதும் ஆடிஅமாவாசை தீர்த்தம் இடம்பெறுவதும் தெரிந்தவையே.

மாதங்களைப் பொறுத்தவரை உத்ராயணம் தஷ்ணாயணம் என இரு பிரிவுகள் உள்ளது. இதில் தஷ்ணாயணம் புண்ணிய காலம் ஆடி மாதத்தில் துவங்குகிறது. ஆடி முதல் மார்கழி வரை தஷ்ணாயண காலமாகவும்இ தை முதல் ஆனி வரை உத்தராயணம் என பிரிக்கப்பட்டுள்ளது. சூரியனின் பாவன இயக்கத்தை (வடகிழக்கு தென்கிழக்கு) வைத்து இது வரையறுக்கப்படுகிறது. தஷ்ணாயணம் துவக்கும் ஆடி மாதத்தில் சூரியனில் இருந்து சூட்சும சக்திகள் வெளிப்படும். வேத பாராயணங்கள் மந்திரங்கள் ஜெபங்கள் மாந்த்ரீகம் ஆகியவற்றிற்கு ஆடி மாதம் சிறந்ததாக கருதப்படுகிறது. பிராண வாயு அதிகமாக கிடைப்பதும் ஆடியில்தான். ஜீவ ஆதார சக்தி அதிகம் உள்ள மாதமாகவும் இது கருதப்படுகிறது.

ஆடி மாதத்தை சக்தி மாதம் என்றும் அழைக்கப்படுகின்றன. எனவே இந்த மாதத்தில் விதை விதைப்பதை முன்னோர்கள் மேற்கொண்டனர். 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்ற பழமொழி உருவானதற்கும் இதுவே காரணம். உத்ராயண காலத்தில் சூரியனில் இருந்து வெளிப்படும் கதிர்களை விட தஷ்ணாயண காலத்தில் (ஆடி) சூரியனின் ஒளிக் கதிர்கள் விவசாயத்திற்கு உகந்ததாக இருக்கும்.

சுற்றுப்புறத்தை தூய்மையாக்கி தெய்வங்களை (அம்மன்) வழிபட்டு உள்ளுணர்வை மேம்படுத்திக் கொள்ளவும் ஆடி மாதம் பயன்படுகிறது. வேப்பிலையை அம்மனுக்கு சாத்தி வணங்குவதும், கூழ் ஊற்றும் விழா நடத்துவதும் ஆடி மாதத்தில் நடக்கிறது. இதற்கு காரணம் ஆடி மாதத்தில் கிடைக்கும் வேப்பிலைக் கொழுந்துகளுக்கு அபார மருத்துவ தெய்வீக குணம் உண்டு.

ஆடி மாதத்தில் பொதுவாகவே காற்று அதிகமாக வீசும். அந்தக் காலத்தில் எளிதில் ஜீரணிக்கக் கூடிய வகையிலான உணவுகள் (கூழ்) சாப்பிடுவது நல்லது. இதனால் ஆரோக்கியம் மேம்படும்.

ஆடி மாத மகிமைகள்
ஆடி மாதம் தமிழ் நாட்காட்டியின் நான்காவது மாதமாகும். ஆடி மாதம் மிக முக்கியமான மாதங்களில் ஒன்று என்று கூறலாம்.

தெய்வீக சக்தியுடன் நம்மை இணைத்துக்கொள்ள ஆடி மாதம் உகந்த மாதமாக கருதப்படுகின்றது.ஆடி மாதத்தில் அநேகமாக அனைத்து அம்மன் கோயில்களிலும் சிறப்பு வழிபாடுகளும் பூஜைகளும் ஏற்பாடு செய்யப்பட்டு விமரிசையாக நடத்தப்படுகின்றன. தெய்வீக சக்தியுடன் நம்மை இணைத்துக்கொள்ள ஆடி மாதம் உகந்த மாதமாக கருதப்படுகின்றது.

இந்த மாதத்தில் விரதமிருந்து அம்மன் கோயில்களில் தங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுபவர்களின் வேண்டுதல் நிச்சயமாக நிறைவேறும் என்று நம்பப்படுகின்றது.
பொதுவாக ஆடி மாதத்தில் வரும் அனைத்து செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளும் மிகவும் புனிதத்தன்மை வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. இந்நாட்களில், பெண்கள் தங்கள் வீடுகளில் பூஜை செய்து மற்ற பெண்களுக்கு வெற்றிலை பாக்கு தாம்பூலம் அளிப்பது வழக்கம்.

### ஆடி மாதத்தில் வரும் நல்ல நாட்கள்

இந்த மாதத்தில் கொணடாடப்படும் சில முக்கியமான பண்டிகைகள் பின்வருமாறு:

**ஆடிப்பிறப்பு:** ஆடி மாதத்தின் முதல் நாள் ஆடிப் பண்டிகை அல்லது ஆடிப்பிறப்பு என்று கொண்டாடப்படுகின்றது.இன்று அந்த ஆடிப்பிறப்பு கொண்டாடப்படுகின்றது. 'ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை ஆன்நதம் ஆனந்தம் தோழர்களே!' என்று பாரதியார் பாடக் கேட்டிருக்கிறோம். தமிழகத்தில் மட்டுமல்லாமல் இலங்கையிலும் தமிழர்களுக்கு மத்தியில் ஆடிப் பிறப்பு மிகச் சிறப்பாகக் கொண் டாடப்படுகின்றது.

**வரலட்சுமி அம்மன் விரதம்:** லட்சுமி தேவிக்கு அர்ப்பணிக்கப்பட்ட முக்கியமான பூஜைகளில் ஒன்றான வரலட்சுமி பூஜை ஆடி மாதத்தில் ஒரு வெள்ளிக்கிழமை செய்யப்படுகிறது. இந்த நாளில் வரலட்சுமி அம்மனுக்கு பூஜை செய்யப்பட்டு பிரசாதங்கள் அளிக்கப்படுகின்றன.

**ஆடிப்பெருக்கு:** ஆடிப் பெருக்கு அல்லது பதினெட்டாம் பெருக்கு என்று அழைக்கப்படும் இந்த விழா ஆடி மாதத்தின் 18 ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது.இவ்வருடத்திற்கான ஆடிப்பெருக்கு அடுத்தமாதம் 3ஆம் திகதி (03.08.2021) கொண்டாடப்படுகின்றது.
நல்ல மழைக்கும் வளமான பயிருக்கும் செழிப்பான விளைச்சலுக்கும் மக்கள் கடவுளை வேண்டும் நாளாகும் சொந்தங்களுடனும் நண்பர்களுடனும் ஆற்றங்கரையிலேயே உணவுண்டு பேசி மகிழும் நாளாகும் இது.

**ஆடிப்பூரம்:** ஆடிப்பூரம் ஆண்டாள் நாச்சியாரின் பிறந்த நட்சத்திரத்தைக் குறிக்கும் திருவிழாவாகும். .இவ்வருடத்திற்கான ஆடிப்பூரம் அடுத்தமாதம் 11ஆம் திகதி (11.08.2021) கொண்டாடப்படுகின்றது.இந் நாளில் சூடிக் கொடுத்த சுடர் கொடி கோதைக்கு கோயில்களில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு பெண்களுக்கு வளையல்கள் வழங்கப்படுகின்றன.

**ஆடிக்கிருத்திகை:** ஆடிக்கிருத்திகை தமிழ்க் கடவுள் முருகனுக்கு உகந்த நாளாகும். முருகனை வளர்த்த கார்த்திகைப் பெண்களை பெருமைப்படுத்தும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுகின்றது. இந்த நாளில் முருகனுக்கு விரதமிருந்து வணங்குவோரை எந்த வினையும் அண்டாது.

**ஆடி வெள்ளி**
ஆடி மாத வெள்ளிக் கிழமைகளில் மகாலட்சுமியை வழிபட்டால் வீட்டில் செல்வம் சேரும். ஆடி மாதம் ஏதாவது ஒரு வெள்ளிக்கிழமை அம்மனை ஆவாகனம் செய்து வீட்டுக்கு வரவழைத்து வழிபடுவது சிறப்பை தரும். ஆடி மாதம் குத்துவிளக்கை லட்சுமியாக பாவித்து அலங்கரித்து வழிபடுதல் வேண்டும்.

ஆடி மாத வெள்ளிக் கிழமைகளில் அதிகாலையில் எழுந்து குளித்து தூய ஆடை அணிந்து சாணத்தைப் பிள்ளையாராகப் பிடித்து செவ்வரளி செம்பருத்திஅறுகு கொண்டு சூர்யோதயத்திற்கு முன்னர் விநாயகரை பூஜிக்க வேண்டும். வாழையிலை மீது நெல்லைப்பரப்பி அதன் மீது கொழுக்கட்டை வைத்து விநாயகரை வழிபட செல்வம் கொழிக்கும்.
இதைவிட ஆடிப்பட்டம் என்பார்கள். ஆடியிலே பட்டம் விடுவதற்கு உகந்தகாலமாகும். ஆடித்தள்ளுபடி என்று வர்த்தகத்துறையினரும் ஆடியைச்சிறப்பிப்பதுண்டு.

ஆடிமாதத்திலே முருகானலயங்களில் ஆடிவேல் விழா எதிர்வரும் 25ஆம் திகதி பூரணையன்று நடைபெறும். கதிரகாமம் உகந்தமலை முருகனாலயங்கள் உள்ளிட்ட முருகனாலயங்களில் கடந்த 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இவ் ஆடிவேல்விழா எதிர்வரும் 25ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருக்கிறது. அதேபோல் ஆடிஅமாவாசை தீர்த்தம் எதிர்வரும் ஆகஸ்ட் 8ஆம் திகதி இடம்பெறவிருக்கிறது திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி ஆலயம் போன்ற ஆலயங்களில் தந்தையர்க்கு பிதிர்க்கடன் செலுத்தும் இந்த ஆடிஅமாவாசை தீர்த்தோற்சவம் நடைபெறுவதும் தனிச்சிறப்பே .

**வேதசகா**

